தென்மொழி

பண்ணாய்ந்த பாவாணன்!

இசையில் தனித்தமிழை
எங்கும் பரப்பி,
வசையின்றிக் காத்த
வலவன்! — திசைதோறும்
பண்ணாய்ந்த பாவாணன்!
பாடும்வா னம்பாடி!
கண்ணோய்ந்தான் யாரினிமேல்
காப்பு?

சுந்தரே சன்பாடும்
சொக்குந் தமிழிசையால்
மந்திரப் பண்ணும்
மலிந்ததே! — எந்தமிழை
யாரே இனி இசைப்பார்?
யாரே சிலம்பொலிப்பார்?
யாரே, பண ணாய்வார்
இனி?

சுவடி : 17
ஓலை 11

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா: 1-

www.thamizham.net - Free E book No 7511

நமக்கு வந்த மடல்கள்.

0 : 849 : பேரன்பினிய தண்டமிழ்ப் பெரியீர், தலை தாழ்ந்த வணக்கம். தமிழும், தமிழரும் வாழ, தாங்கள் பல்லாண்டுகள் வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைப் பேராற்றலை இறைஞ்சுகிறேன். அந்தமான் பகுதிக்குச் சென்று தமிழ் மணம் பரப்பி வந்த சின்னாட்களில் கோவைச் சிறையில் செந்தமிழ் மணம் பரப்பவும், சீர்த் தமிழைக் கெடுத்த சிறுநரியர் நூலாம் மனு (அ)தர்ம நூலைத் தீக்கிரையாக்கவும் மிடுக்குடன் எழுந்து சென்ற செய்தியும் கண்ணுறலானேன். ஆர்வத் துடிப்பிருந்தும் அரசுப் பணி தடுத்ததால் இங்கு இருந்தே எழுச்சி மனத்துடன் இனிய வாழ்த்துப் போக்கினேன். நெடிய தமிழ்ப்புலம் நம் நெஞ்ச நினைவுகட்கேற்ப ஒருநாள் விடியத்தான் போகிறது. அதுவரை ஓய்தல் செய்யோம்! — தலை சாயுதல் செய்யோம்! என்ற பாரதியார் கூற்றின் ஓரடிப் படி வினைபடுவோம். வெற்றி நமக்கே....

நம் மொழியியல் தந்தை பாவாணர் அவர்களின் மறக்கவியலாப் பேரிழப்பின் பெருந்துயர அலைகள் மறைவதற்குள் மற்றுமொரு பேரிடி நம் தலையில் விழுந்திருக்கிறது. குடந்தை சுந்தரேசனார் மறைந்து விட்டாராம். ஐயகோ! தமிழுக்குத் தீயூழோ, தமிழர்க்குக் கொடுங்காலமோ ஏதும் புரியவில்லை! மொழி ஆய்வில் மூழ்கிய மூதறிஞர்களையெல்லாம் ஓ! சாவே! நீ அணைத்துக் கொள்ளுவதில் ஓயா இன்பங் காண்கிறாய் கொல்லோ! விபுலானந்த அடிகட்குப் பின் பண்ணாய்வில் மூழ்கிப் பழந்தமிழ்ப் பண்ணைப் பாரறியச் செய்து வந்தாரே! ஒவ்வொரு திணைக்குமுரிய ஒப்பற்ற பண்ணைப் பாடிக் கழகக் காலத்தைக் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்திய இசைப்புலவனின் இடத்தை இனி யாரே நிரப்பவல்லார்? எளிமையும் இனிமையும், ஈடற்ற ஆழ்ந்த இசைப்புலமையும் சான்ற அந்தப் பெருமகனாரின் நற்றமிழிசையை எங்குக் கேட்பது? எப்போது கேட்பது? சிலப்பதிகாரச் செவ்விசையும் தலைவன் — தலைவியரின் அகவொழுக்க உரையாடலைக் கூறும் அருந்தமிழிசையும் அவரையன்றி இனி எவரே பாடிக் காட்டப் போகிறார்? என்ன செய்வது ?/ ஊழிற் பெருவலி யாவுள என்ற வள்ளுவர் கூற்றிற்கு விடைகூற முடியவில்லையே! இனிய தமிழின் இசைமணம் பரப்பிய அந்த ஏந்தலின் இன்னுயிர் அமைதிக்கும், அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் நம் ஆழ்ந்த இரங்கலை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுவோமாக.

— **புலவர். நாவை-சிவம்.** இல. இ. மணப்பாறை.

0 : 850 : அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஐயா. வணக்கம். தமிழ்மொழிக்கும் தமிழினத்திற்கும் தமிழகத்திற்கும் இறுதிக்காலம் மிகவும் நெருங்கிக் கொண்டிருக்கின்றதோ என்று கருதுவதற்கு இடமளிக்கும் வகையில் அரசியல், பொருளியல், குமுகாய இயல் சூழ்நிலைகள் படிப்படியாய்க் கொடுமை செய்துவருகின்றன. இவற்றி

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7511

இன்னும் பொறுத்திடலாமோ?



இன்னும் பொறுத்திட லாமோ? —தமிழ்
ஈழத்தில் நந்தமிழ்த் தாயினம் நாளும்
மூன்னும் வெறியர்க ளாலே —அந்த
மூடராம் சிங்களக் காடைய ராலே,
மன்னுப கொடுமைகள் தாங்கி —நெஞ்சு
மாழ்கி மாழ்கி மடிந்திடும் செய்தி!
துன்னும் துடுக்கினைச் சாய்க்க-இளந்
தோன்றல்க ளே!உடன் மூண்டெழு வீரே!

மாண்டு மடிந்திட லானார் —இளம்
மங்கையர் கற்பை இழந்திட லானார்!
நீண்ட நெடுந்துயரக் காதை —இன்னும்
நின்றிடும் என்ற நிலையில்லை அங்கே!
ஆண்ட தமிழினம் தம்பி! —இன்றைக்
காளப் படுவதில் மிகக்கொடும் போக்காம்!
ஈண்டுத் தயங்கிட லாமோ? —தமிழ்
இளைஞர் இளைஞருக ளே,எழு வீரே!

சிங்களர்க் கும்தமி ழர்க்கும் —ஒரு
சேர இணைந்திடும் போக்கினி இல்லை!
தங்கும் தமிழறம் எங்கே! —வெறி
தாக்கிடும் சிங்களர் போர்க்குணம் எங்கே!
எங்கும் பொருந்திடல் இல்லை —இனி
எந்தமி ழீழம் அமைதலே நன்று!
பொங்கும் புரட்சியைக் காண்பீர்! —உயிர்
போவதும் வாழ்வதாம் விடுதலைப் போரில்!

தன்னந் தனித்தமி ழீழம் —பெறின்
தாங்குமோ என்பது வீணர்கள் பேச்சு!
சின்னஞ் சிறிதெனும் நாடு —பல
சீருடன் உரிமையில் வாழ்ந்திடும் போதில்
மின்னும் விழைவுக ளோடு —உயர்
மேன்மைத் திறமும் உழைப்பும் மிகுந்தால்
தின்னும் உரிமை வராதோ? —முதல்
தேவை, தமிழர்க்கு விடுதலை ஒன்றே!

நெஞ்சை நிமிர்த்துக தம்பி! —உன்
நேரிய பார்வையைக் கூராக்கு தம்பி!
பஞ்சைய ரல்லரே நாமும் —சேர
பாண்டிய சோழர்தம் வழியினர் அன்றோ!
மிஞ்சும் துயர்வெள்ளம் மேலே —இனி
மேலும் பொறுத்திடல் கோழையர் வேலை!
அஞ்சிடும் சாவுகள் கோடி —எனில்
அஞ்சாமை பெற்ற உரிமைகள் கோடி!

www.thamizham.net - Free E book No 7511



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் முழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபெற்றேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமுழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்**

புரப்பாசிரியர்கள்: தென்மொழி முலலைவாணன் (சிங்கை), தென்மொழி மறை. நித்தலின்பனார், தென்மொழி நெ. முத்துக் குமரனார். அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)

சுவடி : 17] இரட்டை தி.பி. உ0கஉ சூன்-சூலை-'81 [ஓலை : 11

இலங்கையில் தமிழின வேட்டை!

எழுந்தெழுந்து அடங்கும் இலங்கைக் கொடுமையைப் பற்றி நாம் கேள்விப்படும் பொழுதெல்லாம், பாவேந்தரின், 'நான்கு பக்கமும் வேடர் சுற்றிட, நடுவில் சிக்கிய மான்போல், இங்கு, ஏன் பிறந்தேன் இவர்கள் வீட்டில், கரையில் இட்டதோர் மீன்போல்' என்ற வரிகளே நினைவுக்கு வரும். வேடர்கள் நடுவில் சிக்கிய மானைப் போலும், கரையில் போட்ட மீனைப் போலும், தமிழினம் இலங்கையில் அஞ்சி அலைக்கழிக்கப்பட்டுத் துன்புற்றுத் துடித்துக் கொண்டுள்ளது. உரிமைக்குப் போராடுவதும், போராட்டத்தில் உயிரிழப்பதுமே ஓர்

www.thamizham.net - Free E book No 7511

அடிமைப்பட்ட இனத்தின் வாழ்க்கையாக இருக்க முடியும். ஆனால் இலங்கையில் உள்ள தமிழினத்தைப் பொறுக்க மட்டில், அது வரலாறாக இருக்கிறது. 1956-இல் தொடங்கி, 1958, 1961, 1974, 1977 ஆகிய ஆண்டுகளில், சிங்களவர்களால் தமிழர்கள் கொடுமைப் படுத்தப் பட்டிருக்கின்றனர்; கொல்லப்பட்டிருக்கின்றனர்; உறுப்புச் சிதைவு (சித்திரவதை) செய்யப் பட்டிருக்கின்றனர். இறுதியாக நடந்த 1977 ஆகஃச்டு கலவரத்தின்பொழுது மட்டும், ஏதிலிகள் (அகதிகள்) மறுவாழ்வு முகாம் ஆய்வுப்படி, தமிழர்களில் 300 பேர் கொலை செய்யப்பட்டனர். 1500 பெண்கள் கற்பழிக்கப் பட்டனர்; வெட்டி யெறியப்பட்டனர்; 2500 பேருடைய வீடுகள், வணிக நிலையங்கள், கடைகள் எரிக்கப்பட்டன; 4000 கொள்ளைகள், சூறையாடல்கள் நடந்தன; 15000 பேர் வீடிழந்து, நாடிழந்து, உற்றமும் சுற்றமும் இழந்து ஏதிலிகளாக்கப் பட்டனர். ஆனால், இன்னும் இந்தக்கணக்கு தொடர்ந்து நீண்டு கொண்டிருப்பது கொடுமையிலும் கொடுமை! மிகக் கொடுமை!

வழக்கம்போல் இந்த ஆண்டும், கடந்த மே 31 முதல் சூன் 7-வரை, தொடர்ந்து எட்டு நாட்களும் இலங்கையில் யாழ்ப்பாணப் பகுதிகளில் தமிழர்கள், சிங்களக் காவலர்களாலும், படைத்துறையினராலும் வேட்டையாடப் பெற்றிருக்கின்றனர். இப்பொழுது நடந்த சீரழிவோ, இத்தனை யாண்டுகள் நடந்த கொடுமையினும் வேறுபட்டது; மாறுபட்டது. அஃதாவது, கடந்த காலங்களில் நடந்த இன அழிவுக் கலவரங்கள் சிங்கள மக்கள் ஆங்காங்குத் தமிழ் மக்களை அழித்த கதைகளாக நடைபெற்றன. அதைத் தடுக்கின்ற சாக்கில் சிங்களக் காவல்துறையினரும் ஆங்காங்கே தங்கள் கைவரிசைகளையும் காட்டி வந்தனர். மேலும் அந்தக் கலவரங்கள் எல்லாம இலங்கையின் கிழக்குப் பகுதிகளிலும், நடுவில் உள்ள மலையகப் பகுதிகளிலும், குறிப்பாக இந்தியத் தமிழர்கள் என்று குறிப்பிடப் படுகின்ற சிறுபான்மைத் தமிழர்களிடையிலேயே பெரும்பாலும் நடந்தன. ஆனால் சென்ற மாதம் நடந்த கலவரமோ (அதைக் கலவரம் அல்லது தாக்குதல் என்று சொல்ல முடியாது; மாந்தவேட்டை — தமிழின மக்கள்மேல் அரசு தொடுத்த போர் என்று தான் சொல்ல முடியும். அந்தப் போர்..) இலங்கையின் வடக்குப் பகுதியில், அஃதாவது பெரும்பான்மைத் தமிழர்கள் என்று குறிப்பிடப் பெறுகின்ற யாழ்ப்பாணத் தமிழர்கள், இன்னுஞ் சொன்னால் அங்கேயே பிறந்து அங்கேயே வாழ்ந்து, பின் வாழ்விழந்து அடிமையுற்று, இன்று மீண்டும் தாங்கள் ஆள்கின்ற உரிமைக்குப் போராடிக் கொண்டு, செத்தும் சாகாமலும், அழிந்தும் அழியாமலும் இருக்கின்ற தமிழர்கள் வாழ்கின்ற பகுதியிலேயே, அஃதாவது, அரிமாக்கள் வாழ்கின்ற முழைஞ்சுகளிலேயே, குகைகளிலேயே, நரிமாக்கள் புகுந்து, அவற்றைச் சுட்டு வீழ்த்திய கதையாக நடந்துள்ளது. இன்னொரு வேறுபாடும் இந்த சூன் மாத இன அழிவுக்கு உண்டு. சென்ற காலக் கொடுமைகள் இன-அழிவுகள் சிங்களப்பொது

www.thamizham.net - Free E book No 7511

மக்கள், தங்களிடையில் வாழும் தமிழ்ப் பொதுமக்களைத் தாக்கியதால் நேர்ந்தவை. இதுவோ, காவல் துறையினரும் அவர்களுக்குத் துணையாகப் படைத் துறையினரும் சேர்ந்து கொண்டு, தமிழினத்தை அழிக்கப் புகுந்த, அஃதாவது வேலியே பயிரை மேயப் புகுந்த பெருங்கொடுமைத் தன்மை கொண்டது. இனி அக் கொடுமையிலும் அறக் கொடுமை என்னவென்றால், இதைச் சிங்கள அரசே திட்டமிட்டுச் செய்தது என்பதுதான்!

சிங்களக் குலத் தலைவர் — அஃதாவது இன்றைய குடியரசுத் தலைவர் — ஆகிய செயவர்த்தன அரசு என்ன செய்தது? எப்படி அது திட்டமிட்டது: யாழ்ப்பாணத்தில் மே மாத இறுதி நாள் கொடுமை தொடங்குகிறது. அங்கு அதுவரை உயர் காவல் அதிகாரியாகக் கடமை செய்து கொண்டிருந்த, பி. மகேந்திரன் என்னும் தமிழர், மே மாத முதற்கிழமையிலேயே கொழும்புக்கு மாற்றப் படுகிறார். அவருக்குப் பகரமாக பி. டி. குணவர்த்தன என்னும் சிங்கள அதிகாரி, பணியில் அமர்த்தப்படுகிறார். இஃது அரசே திட்டமிட்டுச் செய்த இன அழிப்பு என்பதற்கு முதல் சான்று. இரண்டாவது சான்று.கலவரம் தொடங்கியது மே 31 அன்று இரவு. அன்று மாலை, யாழ்ப்பாணத்தில் உள்ள மரக்கடைக்கு ஒரு சரக்கு உந்து (Lorry) மரங்களை ஏற்றி வருகிறது. அதை ஓட்டி வந்த ஓட்டுநர் ஒரு சிங்களவர். அவரைப் பார்த்து, அங்கிருந்த சிங்களக் காவலர்கள் சொல்லி எச்சரித்திருக்கிறார்கள்; 'இன்று இரவு இங்குக் கலவரம் நடக்கும்; நீ, வண்டியுடன் உடனே திரும்பி விடு' என்று. இதற்கு என்ன பொருள்? கலவரம் திட்டமிடப் பட்டு — அதுவும் அரசின் எண்ணப்படி — கட்டளைப் படி — நடந்தது என்பதற்கு இவற்றைவிட வேறு என்ன சான்றுகள் வேண்டும்?

எப்படியோ, கலவரம் நடந்தது. வழக்கம்போல் சீரழிவுகள் நிகழ்ந்தன; தீ வைப்பும், கடையுடைப்பும், கொள்ளைகளும், நூற்றுக்கு மேற்பட்ட கொலைகளும் நடந்தன. காவலர்களே இவற்றைச் செய்ததால் அவர்களுக்கு இவற்றைச் செய்வது எளிதாக இருந்தது. கிடைத்த வண்டிகளில் ஏறி, அவற்றை இங்கும் அங்குமாகத் தாங்கள் விரும்பிய இடங்களுக்கு ஓட்டச் செய்தனர்; கன்னெய் (Petrol) நிலையங்களில் நிறுத்தி வேண்டிய மட்டும் கன்னெய் ஊற்றிக் கொண்டனர். கன்னெயில் சாக்குப் பைகளை நனைத்துத் தீமூட்டிக் கடைகள் மேலும் வீடுகள் மேலும் வீசியிருக்கின்றனர். எதிரிலிருந்த கோவில்கள், கடைகள், வீடுகள், உந்துகள், இயங்கிகள் தீயிட்டுக் கொளுத்தப் பட்டன. சாம்பலாக்கப் பட்டன. தமிழர்களின் தங்க, வயிர நகைக் கடைகள் முதலிய விலைமதிப்புள்ள விற்பனையகங்கள் கொள்ளையடிக்கப் பட்டன; துணிக்கடைகள், செருப்புக் கடைகள், உணவு விடுதிகள், புத்தகக் கடைகள், தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரியதும் சிறந்ததும் ஏறத்தாழ 97000 அரிய நூல்களைக் கொண்டதுமான யாழ்ப்பாண நூல் நிலையம் 'ஈழநாடு' செய்தித்தாள் அலுவலகம், கூட்டணி அலுவலகம் முதலிய அனைத்தும் சாம்ப

www.thamizham.net - Free E book No 7511

பண்ணாராய்ச்சி வல்லுநர்
ப. சுந்தரேசனார் மறைவு

'பண்ணாராய்ச்சிப் பாவாணர்' என்று தென்மொழியால் பாராட்டப் பெற்ற இசைப்பேரறிஞர் குடந்தை ப. சுந்தரேசனார் கடந்த விடை உ௭(9-6-1981) செவ்வாயன்று நம்மை விட்டு மறைந்தார் என்னும் செய்தி, உண்மையிலேயே நமக்குப் பேரதிர்ச்சியையும் பெருந்துயரத்தையும் தந்தது. மனம் உறுதி தளர்ந்தது. கடந்த ஓராண்டுக் காலத்தில் தலையாய அறிஞர் பெருமக்கள் சிலர் நம்மிடையேயிருந்து பிரிந்தாலும், ஒரு சிலரின் பிரிவு தமிழ்மொழிக்கும் இன முன்னேற்றத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு வாய்ந்ததாகும். அதில் மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் பிரிவை யடுத்து, இசை ஞாயிறு சுந்தரேசனார் அவர்களின் பிரிவு நம்மைப் பெரிதும் சோர்வுறச் செய்த பெரும் பிரிவாகும். அறிஞராயினும் அரசராயினும் பிறந்த அனைவரும் மறைந்துதான் ஆகல் வேண்டும் என்பது இயற்கையே யாயினும், ஒரு சிலர் இழப்பை, அடுத்துள்ள மக்கள் குலம் ஈடுகட்ட வியலாமற் போய் விடுகின்ற நிலையை எண்ணும் பொழுது, நமக்கு ஏற்படும் பிரிவுத் துன்பத்தினும், மக்கள் அனைவர்க்கும் ஒட்டுமொத்தமாக ஏற்படும் முன்னேற்றப் பின்னடைவே மிகப் பெரிதாகும். அந்த வகையில் பாவாணர் அவர்களின் இழப்பால் தமிழ் மொழியின் முன்னேற்றத்தில் ஏற்பட்ட சருக்கல், சுந்தரேசனார் மறைவால் மேலும் பின்னடைவு கொண்டு விட்டது. மொழித்துறைக்கும் இசைத்துறைக்கும் இவ்விரு பேரறிஞர்களும் ஆற்றியிருக்கும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

லாக்கப் பட்டன; மதுக்கடைகள் யானைகள் புகுந்த களரிகள் ஆயின; அங்காடிகள் படைகள் துமித்த களங்கள் ஆயின; பாராளுமன்ற உறுப்பினர் வீடு தீக்கிரை; அவரும் அவர் மனைவியும் சுவரேறிக் குதித்து ஓடி உயிர் பிழைத்துள்ளனர்; விடுதலை முன்னணிக் கட்சிச் செயலாளரும், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் ஆகிய, தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கலவரக் காவலர்களால் தேடப்பட்டுளார்; அவர்களின் கைகளில் அவர் கிடைத்திருந்தால், நடந்திருக்கும் கதை வேறாக இருந்திருக்கும். நல்ல வேளை அவர் தப்பினார்.

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நிலைமை இப்படியே போகுமானால் முடிவு என்னவது? இந்த, இனக் கொடுமைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று உலகத் தமிழினமே கவலை கொண்டுள்ளது. விடிவு என்ன? முடிவு என்றைக்கு? **இவற்றுக் கெல்லாம் ஒரே முடிவு தனித்தமிழீழம் தனியரசு ஆவதே!** அதில் எவ்வகை மாறுதலான பேச்சுக்கும் நெகிழ்ச்சிக்கும் இனி இடமே இல்லை! அந்த முடிவே அனைத்துலகத் தமிழர்களின் ஒருமித்த முடிவு! விடியட்டும் தனித்தமிழீழப் பொதுமைக் குடியரசு! வாழ்க தமிழீழம்!

— பெருஞ்சித்திரனார்

www.thamizham.net - Free E book No 7511

தொண்டு. அவர்கள் இனிமேல் ஆற்றவிருந்த தொண்டின் அளவைப் பார்க்கினும் மிகமிகக் குறைவானதே! ஆனால், அந்தக் குறைவான அளவு தொண்டைக் கூட இனிவரும் பிறர் எதிர்காலத்தில் ஆற்றி விடுவதென்பது அத்துணை எளியதன்று.

பல்வேறு அடிமைத் தளைகளினின்றும் தமிழினத்தை மீட்டுத் தலை நிமிர்த்துவதென்பது, சாய்ந்து போன பனிமலையைப் புரட்டி யெடுத்து நேர் நிறுத்துவதும், ஆழ்ந்து போன குமரிக்கண்டத்தை அகழ்ந்து தூக்கி மேலே கொணர்வதும் போன்றதொரு மிகக் கடின மான பெருவினையாகும். இவ்வினைக்கு அருந்திறம் வாய்ந்த பெரும் பேரறிஞர்கள் அனைவரும் ஆளுக்கு ஒரு கை கொடுத்து உதவினும், இருந்திழந்த நறுந்தமிழ் மீட்சியும் வருந்தியுழலும் தமிழின ஆட்சி யும் எழுச்சி பெறுமா என்பது, இனி, ஐயமே! ஏனெனில் அந்த அளவுக்குத் தமிழும் தமிழினமும் ஆழ் பள்ளத்தில் வீழ்வுற்றுக் கிடக் கின்றன. இத்தகு வீழ்ச்சி நிலையின் தன்மையை உணர்ந்து கொள் வதே மிகப் பலர்க்கு இயலாததொன்றாகும். உணர்ந்த சிலரும் அம் முயற்சியில் தங்களை ஒப்படைத்துக் கொள்ளவும் அஞ்சுகின்றனர்; பின் வாங்குகின்றனர். பெரியார் போலும் குமுகாயத் தலைவர்களும், பாவாணர் போலும் மொழியியல் தலைவர்களும் தமிழினத்திற்கு ஒரே ஒரு முறைதான் கிடைக்க முடியும். அவர் களைப் போன்றே நம் இசை ஞாயிறு சுந்தரேசனார் உழைப்பும் தமிழ் மொழிக்குக் காலத்தால் அடித்த காற்று! ஆனால் இந்த மொட்டைத் தமிழினம் இத் தூய காற்றையுறிஞ்சித் தன் உடல் நோய் நீங்கப் பெற்றிருத்தல் வேண்டும்! ஆனால், இவர்களை நாம் பயன்படுத்திக் கொண்டது எவ்வளவு? 'ஆற்று நிறையத் தண்ணீர் ஓடினும் நாய்க்குச் சலப்புத் தண்ணீர் தான்' என்றபடி, 'அறிஞர்கள் மிகுந்த உழைப்புத்தரினும் தமிழன் எழுச்சி சவளை எழுச்சிதான்' என்பதே நாம் கண்ட - காணுகின்ற - உண்மையாயிருக்கிறது. என் செய்வது?

அறிஞர் சுந்தரேசனார் தம் அளப்பரும் இசையாற்றலையும், தமிழ் மொழியின் இசை வீழ்ச்சியை மீட்டெடுக்கும் பண்ணாராய்ச்சியறிவை யும் விளங்கிக் கொண்டவர்கள் ஒரு சிலரே! எந்தத் துறையினும் கோழிப் புணர்ச்சி யின்பத்தையே பெரிதும் நாடி நயக்கின்ற, நாடி தளர்ந்த இற்றை நலிந்த தமிழின மக்களின் கண்களுக்கு, சுந்த ரேசனார் போலும் ஊழியறிஞர்களின் உருவம் பளிச்சென்று தெரி யாமற் போனதில் வியப்பில்லைதான்! ஆனால், நாம், இப்படியே தான் இருத்தல் வேண்டுமா? நம்மை ஆள்பவர்களும் இவர்களாகவே தான் இருத்தல் முடியுமா! எண்ணிப் பார்க்க வேண்டும்!

கடந்த 1974-ஆம் ஆண்டில் அரியலூர் மணிவாசக மன்றம், மறைந்த பேரறிஞர் சுந்தரேசனார்தம் மணிவிழாவைக் கொண்டாடத் திட்டமிட்டது. ஆனால் அது மனவெழுச்சியோடு நிறைவுற்றது. கதிருமிழும் ஒளிமணிக்கு மெருகெதற்கு? அறிவுமிழும் பேரறிவுக்கு

www.thamizham.net - Free E book No 7511

எதற்கு விளம்பரம்? ஆனாலும், சுந்தரேசனார்தம் இசையறிவைப் பயன்படுத்தியிருக்கக் கூடாதா, இம் மூட அரசு? என்னே, இசைத் தமிழுக்கு ஏற்பட்ட இழப்பு! இனி, இசைத் தமிழை வடமொழிப் பிணிப்பினின்று மீட்க வல்லவர் யாவர்? தனித்தமிழ் இசை மரபுக்கு வாழ்வளிப்பவர் யாவர்? ஐயகோ! என்னே நம் போகூழ் இருந்த வாறு! சுந்தரேசனார் மணி விழா அறிக்கையில் (1974) அப் பேரறிஞரைப் பற்றி எழுதியிருந்த புகழ் வரிகள் இவை :

"இசைத் தமிழில்—தமிழிசையில்—பண்ணிசையில்— ஏழிசையில்—ஒப்பார் மிக்கார் வேறு எவரும் இல்லாது, தமக்குத்தாமே ஒப்பானவராகத் திகழ்பவர் நம் சுந்தரேசனார், என்பதை ஆராய்ச்சியாளர்கள் நன்கறிவர். அவர்கள் முறையே உயர்தனிச் செவ்விசையைப் பயின்றவர்கள்; இசையிலக்கணம் நன்கேயறிந்தவர்கள்; எடுத்துக் கூறிப் பாடும் ஆற்றலுடையவர்கள்; விபுலாநந்தர் யாழ் நூலில் மிக்க பயிற்சி உடையவர்கள்; அவர்களுடைய தமிழிசைப் புலமை மிகவும் நுண்மையும் உண்மையும் உடையது; மரபு போற்றுவது; பழமை தழுவியது; வரன்முறை வழுவாதது; முறைமைக்கு வித்தானது; வைடபுமுறை தவறாதது; செழுமையும் முழுமையும் பொருந்தியது. 'தமிழ் இசையே அவர்கள் உயிர், தமிழ்ப் பண்ணே அவர்கள் உயிர்ப்பு' என்றால் அது மிகையாகாது. தம் வாழ்நாளைத் தமிழிசைக்கே அளித்தவர்கள். அவர்கள் அன்பு உள்ளத்தினர்; இனிய உரையினர், இன்ப அன்பு ததும்பும் அருட் செயலினர்!"

இவற்றை அப்படியே நாமும் ஒப்புகிறோம்! ஆனால் மண்ணுக்கும் பொன்னுக்கும் வேறுபாடு தெரியாத நாம் செய்த கொடுங் கரிசின் பயனாக நமக்கு வந்து வாய்த்த—நம் ஆட்சியாளர்கள் ஒப்புகிறார்களா? ஒப்புகிறார்கள் என்றால் மறைந்த பின், தானுயர, வாறுயரப் பாராட்டும் அவர்களின் உள்ளம் பொருந்தா மரபை, பாவாணர் மறைவுக்குப் பின்னுவது, சுந்தரேசனார் பிரிவுக்குப் பின்னுவது, மாற்றிக் கொண்டு மாந்தத் தன்மை பெறுவது, நம் இனத்துக்கும் மொழிக்கும், அவர்கள் எடுத்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினும் மிகுநலம் பயக்குவதாகும்!

'இதழ் மணி' ஆதித்தனார் மறைவுக்கு இரங்கல்!

தமிழச் செய்தித்தாள் துறையில் எவரும் செய்திராத ஒரு பெரும் மறுமலர்ச்சியை உண்டாக்கியவரும், சிறிதே கற்ற ஏழை எளிய பொதுமக்களுக்கும் செய்தித்தாள் படிக்கின்ற ஆர்வத்தை ஊட்டி வளர்த்தவரும், தமிழ் மக்களிடை 'நாம் தமிழர்' என்னும் இன வுணர்ச்சியைத் தட்டி யெழுப்பியவரும் ஆகிய 'இதழ் மணி' ஆதித்தனார் அவர்களின் மறைவு, நந்தமிழினத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவரின் பிரிவால் ஆறாத்துயருறும் இதழ்த் துறைத் தொழிலாளர்களுக்கும் உறவினர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. ○

www.thamizham.net - Free E book No 7511

இருமொழி யறிஞர்

வி. மு. சோமசுந்தரனார் (வில்லவதரையன்) மறைவு

முன்னாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும் தமிழ் மொழி, சமசுக்கிருதம் ஆகிய இருமொழிகளிலும் மிகு வல்ல புலமை வாய்ந்தவரும், நெடுநாள 'தென்மொழி'த் தொடர்பாளரும் ஆகிய, பெரும்புலவர் **வி. மு. சோமசுந்தரனார்** அவர்கள் கடந்த 12-6-81-இல் திடுமெனமறைவெய்தியது குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். சமசுக்கிருதம் தமிழ்மொழியின் ஏராளமான மூலக் கூறுகளைக் கொண்டிருந்தது என்பதைத் தம் நுண்மான் நுழைபுல வன்மையினால் அறிஞருலகு ஒப்புமாறு பல ஆராய்ச்சிகளைச் செய்த பெருமானார் அவர். தென்மொழியில் 1969-ஆம் ஆண்டில் '**வில்லவதரையன்**' என்ற புனைபெயரில் அவரெழுதிய 'தொல்காப்பியச் சொல்லாராய்ச்சி—மா' எனனும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரை (தென்மொழி' சுவடி 6 ஓலை 10 11) அவரின் அரிய தமிழ் — வடமொழிப் புலமைக்குச் சான்று பகாவதாகும். அன்னாரின மறைவு தமிழ்மொழி ஆக்க வளர்ச்சிக்குப் பெரிதும் இழப்பாகும். தாம் வளர்த்துக் கொண்ட அரிய ஆற்றலை முழுவதுமாக வெளிபடுத்தும் முன்னரே அவர்கள் மறைந்து போனார்கள் — என்பதை நினைக்க நெஞ்சு மிகவும் பதறுகிறது அல்லது தாம் மறைந்து போவதற்கு முன்பே தம் ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்தாமல் போய் விட்டார்கள் என்பதை நினைக்க அவர் மேல் வருத்தமே மேலிடுகிறது. இது பற்றி எத்தனையோ முறைகள் அவர்களிடம் நேரிடையாகவும் குறிப்பாகவும் எடுத்துக் கூறியிருக்கின்றோம். ஆனால், இறுதியில் எதிர்பார்த்தது நடந்தே விட்டது. அவர் அரிதாக வருந்திப் பெற்ற அறிவு இவ்வின மக்களுக்குப் பயன்படாமலேயே போய் விட்டது.

அறிஞர்கள் இறுதிக் காலங்களில் செய்தக்க செய்யாமையாலும், செய்தக்க அல்ல செய்கின்றமையாலும், தம்பால் விளைந்த பேரறிவை எவ்வாறு மக்களுக்கும், மொழிக்கும் பயன்படாதவாறு வீணாக்கி விடுகின்றார்கள் எனபதை அண்மைக் கால அறிஞர்கள் ஒரிருவரின் மறைவு நமக்குத் தெளிவாக உணர்த்திக் காட்டுகின்றது. அவர்களை நாமும் தக்க முறையில் புரக்கவும் பயன்படுத்திக் கொள்ளவும் தவறி விடுகின்றோம் என்பது ஒருபுறம் உண்மையாக இருந்தாலும். ஓரளவு வாய்ப்புக் கிடைக்கும் பொழுதே தாம் பெற்ற அறிவை மக்களுக்கு வெளிப்படுத்தி விடுதல் வேண்டும் என்பதை அறிஞர்களும நன்கு உணர்தல் வேண்டும்.

> நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
> மேற்சென்று செய்யப் படும். — 335

என்னும் குறள்மணி அறிஞர்களுக்கே மிகவும் பொருந்துவதாகும். வி. மு. சோமசுந்தரனார் மறைவால் துயருறும் அன்னார் குடும்பத்தார்க்கும், தமிழன்பர்களுக்கும் நம் நெஞ்சு நெகிழ்ந்த துயரத்தை உரித்தாக்கிக் கொள்கின்றோம்.

o

www.thamizham.net - Free E book No 7511

1. தி. க. முப்பெரும் மாநாடுகள் :

கடந்த மே 9, 10 ஆகிய நாட்களில் கரூரில் திராவிடர் கழகத்தின், பெண்கள் விடுதலை மாநாடு, இட ஒதுக்கீடு மாநாடு, பார்ப்பன மேலாண்மை ஒழிப்பு-மனுநூல் எரிப்புப் போராட்ட விளக்க மாநாடு ஆகிய மூன்று மாநாடுகள் சிறப்புற நடைபெற்றன. 10-5-81 முற்பகல் காலை 10 மணியளவில் நடந்த பார்ப்பன மேலாண்மை ஒழிப்பு - மனுநூல் எரிப்புப் போராட்ட விளக்க மாநாடு பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் நடந்தது. மாநாட்டில் திரு. கே. கே. பொன்னப்பா வரவேற்புரையாற்றினார். திரு. திருஞானசம்பந்தம் கொடியேற்றினார். மானமிகு கி. வீரமணி, அருண் காம்பிளே (தலைவர், தலித்பேந்தர் இயக்கம், பம்பாய்) முதலியோர் உரையாற்றினர். மூன்று மாநாடுகளும் மிகச் சிறப்பாக நடந்தேறின.

2. கோனேரிப்பட்டி — திருக்குறள் தொடர் சொற்பொழிவு :

முன்னர் அறிவிக்கப் பெற்றபடி, சேலம் மாவட்டம், திருவள்ளுவர் நற்பணி மன்றம் சார்பில் நடைபெறவிருந்த திருக்குறள் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி, கடந்த விடை 5-ஆம் பக்கல் 15-5-81-இல் தொடங்கப் பெற்றது. திட்டமிட்டபடி, முதல் நாள் அன்று அரசுயர் பள்ளி, கட்டிடக்குழுத் தலைவர் திரு. பொ. கோபால் அவர்கள் தலைமையில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், 'திருக்குறள் நூல் தோற்றத்திற்கான வரலாற்று அடிப்படையும் தேவையும்' என்னும் தலைப்பில் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். இரண்டாம் நாள் மழையும், இடியுமாக இருந்தாலும், மின்சாரம் நின்று போனமையாலும், வெளியூர் அன்பர்கள் வராமையாலும், திட்டமிட்ட தலைப்பைத் தவிர்த்து, மெய்யறிவியல் தொடர்பாகவும் உளவியல் தொடர்பாகவும் அரியதோர் உரையொன்றை, கூடியிருந்த அன்பர்களின் பொருட்டு, ஆசிரியரவர்கள் நிகழ்த்தினார். மறுநாள் (17-5-81 அன்று) ஈரோட்டில் நடைபெற்ற மனுநூல் எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைப்பட்டமையால், அடுத்து நிகழவிருந்த திருக்குறள் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பெற்றது. அது மீண்டும் நிகழ்த்தப் பெறும் நாளும் இடமும் பின்னர் அறிவிக்கப் பெறும். இன்றியமையாத இடைநிறுத்தத்திற்கு அன்பர்கள் பொறுத்துக் கொள்வார்களாக. (பாவலரேறு சிறைப்பட்ட பின்னர், அவரை எதிர்பார்த்து நிகழ்ச்சிக்கு வந்திருந்த அன்பர்களிடையில், தென்மொழி அன்பர்கள் தஞ்சை அரசிறைவன், ஞானசிகாமணி, தென்மொழி துரையரசன், கல்லை அருட்செல்வன் ஆகியோர் அடுத்த இரண்டு நாட்கள் திருக்குறள் தொடர்பான வேறு சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தியது குறிப்பிடத்தக்கது.)

www.thamizham.net - Free E book No 7511

3. ஈரோட்டில் மனுநூல் எரிப்பு :

கடந்த 17-5-81 அன்று காலை 10 மணியளவில் திராவிடர் கழகச் சார்பில் நடைபெற்ற மனுநூல் எரிப்புப் போராட்டத்தில், ஈரோட்டில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** கலந்து கொண்டு மனுநூலை எரித்தார். அவருடன் தென்மொழிச் சார்பில் புலவர். **இறைக்குருவனார்,** பாவலர் **குமர நடவரச ஈவப்பனார், பாவை. நடவரசன்,** பாவலர் **தமிழ்க்குமரன், க. கண்ணன்** ஆகியோரும், திராவிடர் கழகத் தோழர்கள் தோழியர் பதினெண்மரும் பங்கு கொண்டனர். தொடக்கத்தில் அன்பர்கள் ஈரோடு பெரியார் மன்றத்திலிருந்து பெரிய ஊர்வலமாகப் புறப்பட்டுப் பல தெருக்கள் வழியாகக் கொள்கை முழக்கமிட்டுக் கொண்டு, பன்னீர்ச் செல்வம் பூங்காவை அடைந்தனர். அங்குப் பெரியார் சிலைக்கு முன்னர் எரிப்புப் போராட்டம் நடந்தது. எரிப்பு நிகழ்ச்சிக்கு முன் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும், புலவர் இறைக்குருவனார் அவர்களும் கூடியிருந்த பொதுமக்கள் கூட்டத்திடையே மனுநூல் ஏன் எரிக்கப்பட வேண்டுமென விளக்கிப் பேசினர். பெரியார் அண்ணாசிலைகளுக்குப் பாவலரேறு மாலைகள் அணிவித்தார். பின்னர்ப் பாவலரேறு அவர்களுக்குக் கழக அன்பர்கள் சார்பில் மாலை அணிவிக்கப்பெற்றது. 'குறளியம்' ஆசிரியர் திரு. **வேலா. அரசமாணிக்கனார்** பாவலரேறு அவர்களுக்குப் பட்டாடை ஒன்றைப் போர்த்தினார். பின்னர் எரிப்புப் போராட்டம் நடந்தது. அதையொட்டிப் போராட்டத்தில் ஈடுபட்ட இருபத்து நான்கு பேரும் காவலர்களால் தளைப்படுத்தப் பெற்றுக் கோவைச் சிறையில் காவலில் 30-5-81 வரை வைக்கப் பெற்றுத் தலைமைக் கழக ஏற்பாட்டின்படி பிணையலில் விடுவிக்கப்பெற்றனர். அனைவர் மேலும் இந்திய குற்றவியல் சட்டம் 143, 341 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு நடைபெற்று வருகிறது.

4. கோவைச் சிறையில் கொள்கை முழக்கம் :

மனுநூல் எரிப்புப் போராட்டத்தில் சிறை சென்ற பாவலரேறு உட்படத் தென்மொழி அன்பர் அறுவரும் கோவைச் சிறையிலிருந்த பொழுது, அங்குள்ள திராவிடர் கழக அன்பர்களிடையில் பல்வேறு வகையில். அறிவு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர். கோவை நகரில் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைப்பட்டிருந்த உயர்திரு. கு. வெ. கி. ஆசான் அவர்களும், கோவை மாவட்ட தி. க. தலைவர் திரு. இராமச்சந்திரனார் அவர்களும் தென்மொழி அன்பர்களுடன் கலந்துரையாடி நாள்தோறும் நல்ல பல நிகழ்ச்சிகளை அமைத்துப் போராட்ட வீரர்களுக்கு நல்லறிவு விளக்கங்கள் பல நல்கினர். பாவலரேறு அவர்களும் ஓரிரு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இடையில் 'தமிழின விடுதலை' என்னுந்தலைப்பில் புலவர் இறைக்குருவனார் தலைமையில் பாட்டரங்கம் ஒன்றும் நடந்தது. பாட்டரங்கில் தென்மொழி அன்பர்களும் கழக அன்பர்கள் ஓரிருவரும் கலந்து கொண்டனர். இறுதி நான்கைந்து நாட்களில் புலவர் **இறைக்குருவனார்** அவர்கள் அங்கிருந்த அனைவர்க்

www.thamizham.net - Free E book No 7511

கும் நாள்தொறும் 'கழக இலக்கிய அறிமுக வகுப்புகள்' நடத்தி வந்தது குறிப்பிடத் தக்க சிறப்பான நிகழ்ச்சியாகும்.

5. இலங்கைத் தமிழர் இன அழிப்புக் கண்டன முறையீட்டு ஊர்வலம், சென்னை :

5-6-81 அன்று காலை 10 மணியளவில் சென்னை, சட்டக் கல்லூரியினின்று, சென்னை, தமிழீழத் தோழமைக் கழகம், புதுதில்லி, இந்திய ஈழவர் நட்புறவுக் கழகம், தமிழக — ஈழ நட்புறவுக் கழகம், தமிழ்நாடு திரும்பிய ஈழவர் நிறுவனம், தமிழக — குமுகாய அரசியல் மேம்பாட்டு முன்னணி, தாயகம் திரும்பிய மாணவர் இளைஞர் மன்றம் ஆகிய நிறுவனங்களின் சார்பில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையிலும், சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் விடுதலை முன்னணித் தலைவர் திரு. **செயக்குமார்** சார்பிலும் ஓர் அணி, புறப்பட்டு, இலங்கைத் தமிழர் இன அழிப்புக் கண்டன முறையீடு ஒன்றை, இலங்கைத் தூதுவரிடம் கொடுத்தது. அணியில் திருவாளர்கள் **தென்மொழி மறை நித்தலின்பனார்,** தென்மொழி ப முருகவேள், ந. அரணமுறுவல் முதலியோர் கலந்து கொண்டனர்.

6. தனசேகரன் — இரேணுகாதேவியர் வாழ்க!
சந்திரன் — பூங்கோதையர் வாழ்க!

கடந்த 7-6-81 ஞாயிறு காலை 9 மணியளவில், கடலூர்-புதுநகர் ஆயிரம் வைசியர் அரங்கில், தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** தலைமையில், செல்வன் **செ. தனசேகரன்** (தமிழ் ஆராய்ச்சியாளர் அ. ப. கழகம்) செல்வி. **இரேணுகாதேவிக்கும்**; செல்வன் **செ. சந்திரன்,** செல்வி. **பூங்கோதைக்கும்** தமிழ்த் திருமணம் மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. பேரா. ஏ. எல். சிதம்பரம் அனைவரையும் வரவேற்றார். மணமக்களை வாழ்த்தித் **திருக்குறள் முனுசாமி,** திரு. **கி. ஆ. பெ. விசுவநாதம், பாவலரேறு பெருஞ்சித்திரனார்,** பாவலர் **சுரதா** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புலவர். **சோம. இளவரசு** நன்றி கூறினார்.

7. பாவேந்தர் தமிழியக்க மாநாடு — உரத்தநாடு :

உரத்தநாடு, தமிழர் உரிமைக் கழகச் சார்பில், கடந்த 6, 7-6-81 ஆம் பக்கல்களில், பாவேந்தர் தமிழியக்க மாநாடு, மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இரண்டு நாட்களிலும் இன்னிசை, பட்டி மன்றம், கருத்தரங்கம், வழக்காடு மன்றம், பாட்டரங்கம் முதலியன நடைபெற்றன. அவற்றில் திரு. **புலமைப்பித்தன்,** வெள்ளூர் **தா. வீராச்சாமி, பேரா. அப்துல்கரீம்.** புலவர் **த. ச. தமிழனார்,** திருக்குறள் **வீ. முனுசாமி,** பா. **இளங்கோ,** பா. **இளவரசு,** அரங்க வடிவேலன், மு. இராமசாமி, அரசிறைவன், சாமி. தவிடன், புலவர் அ நக்கீரனார், மாண்புமிகு **இராசாமுகமது,** மன்னை. ப. நாராயணசாமி, தா. பாண்டியன், உலக. கணேசன், பூவை. சண்முகம், பா. **ஔவை நடராசன்,** சாலமன் பாப்பையா, பேரா. துரையரசன், பா. குருவிக் கரம்பை

www.thamizham.net - Free E book No 7511

சண்முகம், பாவலர்கள்: தங்க. அன்புவல்லி, த. தொழும்பன், இரா. பண்டரிநாதன், அறிவுமதி, சாமி. சங்கரலிங்கம், பாவலரேறு பெருஞ்சித்திரனார், திருவாரூர் தங்கராசு, மன்னர் மன்னன், நா. கை. பாட்சா ஆகியோர் கலந்து கொண்டனர். இரண்டு நாள் நிகழ்ச்சிகளும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. அன்பர்கள் சாமி துவிடன், இறை யெழிலன், த. செல்வராசு, க. அன்பரசு, நா. வை. இளஞ்செழியன், தமிழ்த் தென்றல், அறவண்ணன், கோ. இளமுகன், பழ. மணி வண்ணன் ஆகியோர் மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கும் பல்லாற்றானும் துணை நின்று உழைத்தனர். மாநாட்டின் இறுதியில், தமிழக அரசு தொடங்க விருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் பாவாணர் பெயர் சூட்டும் தீர்மானம் உள்பட பத்துத் தீர்மானங்கள் நிறை வேற்றப் பெற்றன.

8. இலங்கைத் தமிழர் இன அழிப்புக் கண்டன முறையீட்டு ஊர்வலமும் பொதுக் கூட்டமும், புதுவை :

சென்ற 11-6-81 மாலை 5 மணியளவில், புதுவையில், தமிழகத் தமிழீழத் தோழமைக் கழகச் சார்பில், சுதேசி பஞ்சாலையிலிருந்து, இலங்கைத் தமிழர் இன அழிப்புக் கண்டன ஊர்வலம் ஒன்று பாவல ரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் நடந்தது. ஊர்வலத் தில் அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்டனர். ஊர்வலம் பல்வேறு முழக்கங்களுடன் பல தெருக்கள் வழியாகப் புதுவை ஆளுநர் மாளிகை சென்று, இலங்கைத் தமிழர் படும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த இந்தியத் தலைமையமைச்சர் இந்திராகாந்தியைக் கேட்டுக் கொள்ளும் முறையீட்டு வேண்டுகோள் ஒன்றை ஆளுநரிடம் கொடுத்தது. அதனை யடுத்து, மாலை 8 மணியளவில் புதுவைக் கடற் கரைத் திடலில் நடந்த கண்டனப் பொதுக்கூட்டத்திற்கு திருவாட்டி பவானி மதுரகவி தலைமைதாங்கினார். கூட்டத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஈழவேந்தன், அருகோபாலன், தென்மொழி மறை நித்தலின்பனார் பூ. மூர்த்தி (சட்டமன்ற உறுப்பினர்), கு. கலை மணி (தி. க.) ம. மஞ்சினி (தொழிற்சங்கத் தலைவர், இந்தியப் பொது வுடைமைக் கட்சி), க. கருணாநிதி (இந். பேரா.) குமார் (கா. கா. தே. பே) வீ. சு. கரிகாலன், சபாபதி (தி. மு. க.) ஆகியோர் அண்மை யில் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் பற்றிப் பேசி னர். இரவு 11 மணியளவில் கூட்டம் சிறப்புற முடிவடைந்தது. கூட்ட இறுதியில் குடந்தை பண்ணாராய்ச்சிபறிஞர் சுந்தரேசனார் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் ஒன்றும், இலங்கைத் தமிழினப் படுகொலையைக் கண்டித்துத் தமிழக முதல்வரை அறிக்கை விடக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றும், இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற நிலையான ஓர் அமைதிப் படையை அனுப்ப உலக ஒன்றிப் பேரவையைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப் பெற்றன.

www.thamizham.net - Free E book No 7511

9. தமிழீழத் தோழமைக் கழக ஊர்வலம் — கோவை :

கடந்த 20-6-81 மாலை 5 மணியளவில் தமிழீழத் தோழமைக் கழகத்தின் சார்பாகக் கோவை நகரில், ஈழத்தமிழர்கள் இனப் படுகொலையைக் கண்டித்துப் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையில் தமிழக ஈழப் பண்பாட்டு மன்றம், திருக்குறள் மன்றம், பல்லடம், திரு வி, க. மன்றம் அவநாசி, பாவாணர் தென்மொழிப் பாசறை, திருப்பூர், முதலிய அனைத்துப் பொதுமன்றங்களையும், தி.க, தி.மு.க. அ. தி. மு. க முதலிய அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த பெரிய ஊர்வலம் ஒன்று, கோவை, காந்திபுரம் 100 அடிச் சாலையிலிருந்து, புறப்பட்டுப் பல முகாமையான சாலைகள் வழியாகப் பல வகை முழக்கங்களுடன் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையீடு ஒன்றைக் கொடுத்தது. அந்த முறையீட்டுக் கோரிக்கையில், ஈழத் தமிழர்களுக்கு நேரும் இடர்ப்பாடுகள் தொடராமலிருக்கவும், ஈழத் தமிழர்கள் எல்லா உரிமைகளும் பெற்று முழு அளவு நலமுடன் வாழ்வதற்குத் தேவையான அரசியல் அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு, உலக ஒன்றியத்தின் சார்பில் நடுநிலை அமைதிக் குழுவொன்றை இலங்கைக்கு நிலையாக அனுப்பவும், இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் ஊர்வலத்தினர் வேண்டிக் கொண்டிருந்தனர். ஊர்வல ஏற்பாட்டைத் தமிழக ஈழப் பண்பாட்டு மன்ற அமைப்பாளர் பேரா. திரு. **கு வெ கி ஆசான்** அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். ஊர்வலத்திலும், அதன் முடிவில் ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடந்த கோரிக்கை விளக்கக் கூட்ட நிகழ்ச்சியிலும், திரு ஆசான் அவர்களும், திருவாளர்கள் **அரு கோபாலன், ஏ. எசு. மணவைத் தம்பி, தென்மொழி மாற நித்தலின்பனார்** அவர்களும், கோவை. தி. க. தலைவர் இராமச்சந்திரனார் அவர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். இறுதியில் பாவலரேறு அவர்கள் முடிவுரையில் நிகழ்ச்சித் தொடர்பான பல விளக்கங்களைக் கூறினர்.

இந் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, வட கோவை, கல்வியகத்தில், முன்னிரவு 7½ மணியளவில் கருத்துரை நிகழ்ச்சி ஒன்றும் **பாவலரேறு** தலைமையில் நடந்தது. இக் கருத்துரைக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்துக் கட்சி அன்பர்களையும் பேரா. கு. **வெ. கி. ஆசான** அவர்கள் அன்புடன் வரவேற்றார். பாவலரேறு முன்னுரைக்குப் பின் தமிழினத்தின் எதிர்காலம் குறித்துப் பல்வேறு ஆக்கக் கருத்துகளை, திருவாளர்கள் பழனிச்சாமி, நாச்சியப்பன், இராதாகிருட்டிணன், தென்மொழி இளமாறன், மணிமாறன், நா. சுப்பிரமணியம், கு. தமிழ்மகன். நடராசன், படையேல் நர் துரை, குப்புராசு, அக்கினி புத்திரன், சங்கரலிங்கம், மின்பாறை பாலு, கோபி வழக்கறிஞர் திரு. கு. ச. ஆனந்தன், தமிழடியான், இராமரத்தினம், 'இலங்காராணி' அருள், நா. ப செல்வராசு, கா. சா. அப்பாவு, தென்மொழி ஞானபண்டிதன், தென்மொழி துரையரசன், த. மு அ. சண்முகம் ஆகியோர் தெரிவித்தனர். அவர்களையடுத்துத் திருவாளர்கள் ஏ. எசு மணவைத்தம்பி,

தென்மொழி மறை நித்தலின்பனார், அரு. கோபாலன் ஆகியோர் அரிய கருத்துரைத்தனர். 'எவ்வாற்றானும் தமிழின முன்னேற்றத் திற்கெனப் புதியதோர் இயக்கம் ஒன்று தேவை' என்னும் பெரும் பான்மை அன்பர்களின் முடிவை ஒட்டிப் **பாவலரேறு** அவர்கள் அரியதொரு தீர்வுரை செய்து, 'இயக்கம் விரைவில் தொடங்கப் பெறும்' என்னும் முடிவுரையைத் தந்தார்கள். நிகழ்ச்சி இரவு 12-30 அளவில் நிறைவுற்றது. இறுதியில் வெளியூர் அன்பர்களுக்கும் பேராளர்களுக்கும் பேராசிரியர் ஆசான் இல்லத்தில் இரவுண்டி அளிக்கப் பெற்றது (நிகழ்ச்சிக்காகக் கோவை சென்ற பாவலரேற் றிற்கும் பேராளர்களுக்கும், இடையில் ஈரோட்டில் நகர தி. க. தலைவர் அவர்களாலும், தோழர்களாலும் ஈரோடு தொடர் வண்டி நிலையத்தில் சிறந்த வரவேற்பு அளிக்கப் பெற்று மாலைகளும் துண்டு களும் அணிவிக்கப் பெற்றதுடன் மோரும் பழங்களும வழங்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது.)

10. பகுத்தறிவாளர் கழகப் பொதுக் கூட்டம்—திருவண்ணமலை :

சென்ற 22-6-81 மாலை 7 மணியளவில், திருவண்ணமலையில் காந்தி சிலையருகில், பகுத்தறிவாளர் கழகத்தின் முதல் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் தொடங்குவதற்கு முன் மாலை 6 மணியளவில் நகரத் தி. க தலைவர் பா. நீலகண்டன், செயலாளர் திருமலை, தண்டராம்பட்டுத் தி.க. தலைவர் கணபதி, மாவட்டத் தி. க. துணைத்தலைவர் குருசாமி, ப. க. தலைவர் சந்திரசேகரன், ப. க. செயலாளர் மு. செகந்நாதன், வ. மணி, பொருளாளர். ம. பி. மணி ஆகியோர் உடன் வர, தந்தை பெரியார் சிலைக்குப் **பாவலரேறு** பெருஞ்சித்திரனார் மாலையணிவித்தார். பொதுக் கூட்டத்திற்குப் ப. க. தலைவர் சந்திரசேகரன் தலைமையேற்றார். வீரமணிதாசன் கழப் பாடல்களைப் பாடினார். அவரையடுத்துப் புலவர் இரும்பொறை, கணபதி, அன்பானந்தம், செல்வி. அ. கத்தூரி, மு. செகந்நாதன், மு. கவுதமன். வழக்கறிஞர் இரா. இரேணு, பட்டாபிராமன், மணி, திருவாட்டி செயலக்குமி கண்ணபிரம் அவர்களின் உரைக்குப் பின் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் அரியதொரு சிறப்புரை யாற்றினார். பொருளாளர் மணி அவர்களின் நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி இரவு 12-30 மணியளவில் சிறப்புற முடிவுற்றது. நிகழ்ச்சி யின் பொழுது பாவலரேறு அவர்களுக்குப் பல்வேறு கழகங்களாலும் அன்பர்களாலும் மாலைக்குப் பகரமாக உருபா இருபத்தெட்டு அன் பளிப்பாக வழங்கப் பெற்றது.

பிற செய்திகள்

1. தற்றமிழ்ப் பேரவை, திருச்சி–14.

கடந்த 14-4- 81 மாலை 7 மணியளவில், திருச்சி-திருவெறும்பூர் அண்ணா சீரணி அரங்கில், தமிழீழ விடுதலை விளக்கப் பொதுக்

கூட்டம், நற்றமிழ்ப் பேரவைச் சார்பாக மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சி திரு. அ. மு. சம்பந்தம் க. இ; ச. இ. தலைமையிலும், திரு. கூ. ச. முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. குழந்தை ஈகவரசன் தென்மொழிப் பாடல்களைப் பாடி, வரவேற்புரையாற்றினார் திரு. ஈழவேந்தன் சிறப்புரையாற்றினார். திரு. இராமச்சந்திர மூர்த்தி நன்றியுரையாற்றினார்.

2. நூறாசிரியம் (2-ஆம் பகுதி) வெளியீட்டு விழா:

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நூறாசிரியம் (2 ஆம் பகுதி) கோவை, பெருஞ்சித்திரனார் பதிப்பகத்தினரால் வெளியிடப் பெற்றுள்ளது. இந் நூலின் வெளியீட்டு விழாவைத் தி. பி. 2012 விடை 31 (13-6-81) மாலை 8 மணியளவில் பல்லடம் இளைஞர் மன்றத்தினர் நடத்தினர். தென்மொழி ந. முத்துக்குமரனார் தலைமையில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் நூலை வெளியிட்டார். ஈரோடை வேலா. அரசமாணிக்கம் அவர்கள் நூலின் முதற்படியைப் பெற்றுக் கொண்டார்.

3. இளைஞர் மன்றம் — பல்லடம் — பட்டி மண்டபம்:

பல்லடம் இளைஞர் மன்றத்தினர் தி. பி. 2012 விடை 31 (31-6-81) மாலை 8½ மணி அளவில் தென்மொழி முத்துக்குமரனார் தலைமையில் பட்டி மண்டபம் ஒன்றை நடத்தினர். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களை நடுவராகக் கொண்ட இப் பட்டி மன்றத்தில் நாட்டின் நலிவிற்குக் கரணியம் 'பொது நல மின்மையே' என்னும் அணியில் பேரா. சே. சத்திய சீலன், புலவர் இறைக்குருவனார், புலவர் அமுதன் ஆகியோரும், 'பொருளின்மையே' என்னும் அணியில் பேரா. சாலமன் பாப்பையா, சுபாசுசந்திரபோசு, செந்தலை ந. கவுதமன் ஆகியோரும் உறழாடினர். நாட்டின் நலிவிற்குக் கரணியம் பொது நலமின்மையே எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. தொடக்கத்தில் இளைஞர் மன்றத்தலைவர் அ. தனசேகரன் அனைவரையும் வரவேற்றார். ச. மணி நன்றியுரைத்தார்.

4. ஆசிரியர் நடுவம் — அவநாசி — சிறப்புக் கூட்டம்:

அவநாசி - தாமசுபுரம் ஆசிரியர் நடுவத்தின் சிறப்புக் கூட்டம் தி. பி. 2012 விடை 31 (13-6-81) காலை 10 மணி அளவில் திரு. அ. எழிலாண்டார் (இராமசாமி) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. க. க ஆறுமுகம் வரவேற்புரைத்தார். புலவர் இறைக்குருவனார் "பாவாணரும் பைந்தமிழும்" என்னும் பொருள் பற்றிச் சிறப்புரையாற்றினார்.

5. தமிழ் இலக்கிய மன்றம் — திருப்பூர்:

திருப்பூர்த் தமிழ் இலக்கிய மன்றத்தின் சிறப்புக் கூட்டம் தி.பி. 2012 விடை 32 (14-6-81) மாலை 7 மணி அளவில் தமிழ்த்திரு

www.thamizham.net - Free E book No 7511

அறிவரசனார் (ஞானபூபதி) க. மூ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புலவர் இறைக்குருவனார் "பாவாணரின் தமிழ்ப்பணி" என்னும் பொருள்பற்றிச் சிறப்புரையாற்றினார். தொடக்கத்தில் புலவர் துரையரசன் அனைவரையும் வரவேற்றார். திரு. தமிழப்பன் நன்றி நவின்றார்.

6. தமிழீழத் தோழமைக் கழகம் — சித்தோடு :

சென்ற (14-6-81) சித்தோடு நடுப்பாளையம் விநாயகர் திடலில் தமிழீழத் தோழமைக் கழகத்தார் அனைத்துக் கட்சியினரின் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டினர். இதில் தமிழீழத் தமிழர்கள் சிங்கள வர்களால் துன்புறுத்தப்பட்ட பலவகைச் செய்திகளை எடுத்துக் கூறினார்கள். கூட்டத்தில், தி மு க; அ. தி மு. க; கா. கா. தே பே. (கா); பொதுவுடைமைக் கட்சி; சனதா ஆகிய கட்சிகளைச் சேர்ந்த அன்பர்களும், ஈரோடு தமிழீழத் தோழமைக் கழகத்தைச் சேர்ந்த திரு. அ. இராமலிங்கம், திரு. அ குமரன், பாவலா திரு. தமிழ்க்குமரன், சித்தோடு ப. தமிழடியான், ஆகியோரும் பேசிய பின் இறுதியாகத் தமிழீழம் பற்றிய 'தென்மொழி'ப் பாடல்கள் பல பாடி நன்றி கூறி நிறைவு செய்து வைத்தார் பாவலர் திரு குமரநடவரச ஈவப்பனார் அவர்கள். கூட்டம், இந்தியக் குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர், தமிழ்நாடு முதல்வர், உலக நாடுகள் பேரவைச் செயலாளர் நாயகம் ஆகியோரை உடனடியாகத் தலையிட்டு செய்து தமிழீழத் தமிழ் மக்களின் இன்னல் நிலைக்குத் தீர்வு காண வேண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதுடன் இரவு 10-30-க்கு இனிதே முடிந்தது.

7. இராசலட்சுமி — சுகேசன் வாழ்க !

தென்மொழியின் சென்னை வெளிநாட்டு முகவர் திரு. பாலகிருட்டிணன் அவர்களின் தங்கை இராசலட்சுமிக்கும், செல்வன் சுகேசனுக்கும், கடந்த 31-5-81 அன்று, சென்னை, ஏ. வி. எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில் இனிதே திருமணம் நடைபெற்றது. மணமக்களைத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

8. சிவஞான மூர்த்தி — சரோசா வாழ்க !

ஈரோடு தென்மொழி முகவர் சி. பனிமலைப்பதியன் (கைலாசம்) அவர்களின் இளவல் செல்வன். சி. சிவஞான மூர்த்திக்கும், செல்வி சரோசாவுக்கும், ஈரோடு 3, மீனாட்சி கலியாண மண்டபத்தில், சென்ற 14-6-81 அன்று இனிதே திருமணம் நடைபெற்றது திருமண அன்பளிப்பாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா ஐந்து வழங்கப் பெற்றது. மணமக்கள் நீடுழி வாழத் தென்மொழி மனநிறைவுடன் வாழ்த்துகிறது.

www.thamizham.net - Free E book No 7511

நன்கொடைகள்

(20-6-81-ஆம் நாள் வரை நன்கொடை வரவுகள்.)

1.	20-4-81	கே. பன்னீர்ச்செல்வம், பம்பாய்.	4.00
2.	28-4-81	தென்மொழியன்பர்கள் காசிநாதன், இராசேந்திரன், சோமசுந்தரம், படைத்துறை, மேகலாயா, (ஏப்பிரல், மே, சூன்)	45-00
3.	28-4-81	புதுக்கோட்டை மா. இலக்குமணன்-பானுமதி அவர்களின் திருமண நினைவாக	11-00
4.	2-5-81	இரணியன், கோவை. (மே, சூன்)	20-00
5.	6-5-81	தங்கச்சிமடம், மெய். அருண்மொழியன்-அருள் நம்பு அவர்களின் நான்காம் மகள் இளவேனிலின் இரண்டாமாண்டு நிறைவின் நினைவாக	5-00
6.	23-5-81	திருச்சி-14 குழந்தை ஈகவரசனின் இளவல் கு. சோதி பிரகாசம் துருக்காபூர் இரும்புத் தொழிற்சாலையில் பணியமர்த்தம் பெற்றதன் நினைவாக	10-00
7.	31-5-81	இராசிபுரம், உளங்கவரமுகன் வழி-சேலம் மாவட்ட தென்மொழியன்பர்கள், சு. வேங்கடாசலம், ப. தா. பொன்னுசாமி, இரா. பெருமாள், க. வெங்கடாசலம் ந. க கந்தசாமி, மு. அ. மோகன், வெங்கடாசலபதி, இரா. மாதவன், வ. குப்புசாமி, இரா. நல்லதம்பி, க. முத்துசாமி, இரா. மாணிக்கம், க. குழந்தைவேல் உளங்கவரமுகன் ஆகியோர் கொடுத்தது	46-00
8.	1-6-81	கோவிற்பட்டி பெ. இராமையா மகன் கனக சுப்புரத்தினம்-மல்லிகை ஆகியோருக்குப் பிறந்த பெண் குழந்தை கயல்விழியின் நினைவாக	11-00
9.	18-6-81	ப. சாம்பசிவம், படைத்துறை, தாம்பரம். ஏப்ரல், மே, சூன், சூலை மாத நன்கொடை	20-00

0 நன்கொடை நல்கிய தூய தமிழ் நெஞ்சங்கட்கு நன்றி!

0 குழந்தைகள் இளவேனில், கயல்விழி நீடுழி வாழத் தென்மொழியின் உளமார்ந்த வாழ்த்துகள்!

0 மணமக்கள் இலக்குமணன்-பானுமதி எல்லா நலனும் வளனும் பெற்று வாழ நெஞ்சு நிறைந்த வாழ்த்துகள்!

www.thamizham.net - Free E book No 7511

பஞ்சாபில் பிரிவினைக் குரல்?

—ப. பத்மநாபன். க. மு, ச இ.

சீக்கியர்கள் (Sikhs) இந்தியத் துணைக் கண்டத்தின் வடபகுதியில் உள்ள பஞ்சாப் மாநிலத்தில் வாழும், வீரமும் உழைப்பும், இன உணர்வும் நிரம்பிய ஒரு தனி தேசிய இனம். "சர்தார்சிகள்" (Sirda jis) என்று சீக்கியர்கள் வழமையாக குறிப்பிடப்படுவர். இவர்களின் அழுந்த வாரப்பட்ட தாடியும், கருத்த மீசையும், தலையின் உச்சியில் (பார்ப்பனர்களைப் போலப் பின்னுக்கு அன்று) வாரி முடியப்பட்ட சிறு குடுமியும், அதையும் சேர்த்துத் தலை முற்றிலும் மறைத்து கட்டப்பட்ட தலையணியும் இவர்களை எளிதில் மற்ற இன மக்களிடமிருந்து இனம் பிரித்து அடையாளம் காண வழி செய்யும். உலகின் பல நாடுகளிலும் இன்று இவர்கள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். பசிபிக் பெருங் கடலில் உள்ள பிசி தீவுகள், (Fiji islands), நியூசிலாந்து (New Zeland), ஆத்திரேலியா (Australia) முதல், இங்கிலாந்து, செருமனி, அமெரிக்கா, கனடா, பிரான்சு, சுவிட்சர்லாந்து, ஆத்திரியா ஆகிய ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும், ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் சென்று குடியேறி, உழவர்களாகவும், வணிகர்களாகவும், தொழில் முதல்வர்களாகவும், அரசு அதிகாரிகள், நடுவர்கள், வழக்குரைஞர்கள், மருத்துவர்கள், கட்டிடக் கலைஞர்கள், பொறியாளர்கள் எனப் பலதுறைத் தொழில்களிலும் ஈடுபட்டுச் சிறப்புடனும், வளத்துடனும் வாழ்ந்து வருபவர்கள் சீக்கியர்கள். இந்தியத் துணைக் கண்டத்துள் உள்ள அனைத்து மாநிலங்களிலும் சென்று வாழ்கின்றார்கள். நாட்டைக் காக்கும் படையில் சேர்ந்து சில ஆண்டுகளாயினும் பணியாற்ற வேண்டும் என்பது ஒவ்வொரு சீக்கியக் குடும்பமும் ஏற்றுக் கடைப்பிடித்துவரும் மரபு. இதனால் தான் வான் படை, தரைப்படை, கடற்படை ஆகிய முப்படைப் பிரிவுகளிலும் சீக்கியர் மிகுதியாக காணப்படுகின்றனர். உலகெங்கும் பரவி வாழும் தமிழினத்தின் உணர்வுள்ள தமிழர்களெல்லாம் தம் இனத்துக் கென ஒரு தனி உரிமை நாடில்லையே என்று ஏக்கம் கொண்டிருப்பது போலவே, இன உணர்வும், வீரமுமிக்க சீக்கியரிடையேயும் அவர்கள் தம் தலைவர்களுக்கும், தங்களுக்கென தனி ஒரு நாடு தேவை என்ற எண்ணம் படிப்படியாகத் தீவிர மடைந்து வருகின்றது. இந்தப் பிரிவினைப் போக்கு இந்திய நடுவண் அரசின் கவனத்திற்கு வந்து கவலையை அளித்துள்ளதாகச் செய்தி ஏடுகள் செய்திகள் அளித்துள்ளன. இன உணர்வும், அரசியல் விழிப்புணர்வும் உடைய தமிழர்கள் அச் செய்திகளை அறிவது இன்றியமையாதது.

தலைமைக் கல்சா திவான் (Chief Khalsa Diwan) என்பது சீக்கியர்களுள் பொறுக்கி எடுக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய ஓர் அமைப்பு (Elit Organisation). இஃது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் துணைக்கண்டத்தை ஆட்சி செய்த அவர்களுக்கு ஆதரவாகவும், விடுதலைக்குப் பின் ஆட்சியில் இருந்தவர்களுக்கெல்லாம்

www.thamizham.net - Free E book No 7511

சார்புடைய தாகவும் இருந்து வந்துள்ளது. 1908-ஆம் ஆண்டில் இந்த அமைப்பு 'சீக்கியர் கல்வி மாநாடு''(Sikhs Education Conference) என்ற இன்னோர் அமைப்பை நிறுவியது. இந்த ''மாநாட்டு'' மேடையில் கடந்த பல ஆண்டுகளாகப் பேசப்பட்டதெல்லாம் சீக்கிய சமயத் தலைவர்களின் அறவுரைகள் பற்றியும், கல்லூரிகளும் பள்ளிகளும் நிறுவி, சீக்கியர்களுக்கு இக்காலக் கல்வியைக் கொடுப்பது பற்றியுந்தாம். தலைமைக் கல்சா திவான் கடந்த மார்ச்சு மாதம் மூன்றும் கிழமையில் பஞ்சாப் மாநிலத் தலைநகரான சாண்டிகாரில் 54-ஆவது ''அனைத்து இந்திய சீக்கியக் கல்வி மாநாட்டை''க் கூட்டியது. அதன் மேடையில் மறைமுகமாகச் சீக்கியர்களுக்குத் தனி நாடு தேவை என்று வலியுறுத்திக் கூறப்பட்டது. சீக்கியர்களின் அரசியலில் வளர்ந்து வரும் தீவிரக்கொள்கைப் போக்கிற்கு இந்தக் கோரிக்கை மிகவும் வலுவூட்டக் கூடியதாக அமைந்தது. அமெரிக்க நாட்டில் வளத்துடன் அமெரிக்கக் குடிமகனாகவே வாழும் சீக்கியர் திரு. கங்கா சிங் தில்லோன் (Mr. Ganga Singh Dhillon) என்பவர் ''மாநாட்டின்'' தொடக்கவுரையில் தனிநாடு வேண்டுகோளை விடுத்தார். திரு. தில்லான் அமெரிக்காவில் உள்ள ''நான்கான சாகிப நிறுவன'' (Nankana Sahib Foundation) அமைப்புக்குழு உறுப்பினர். பாக்கித்தான் அதிபர் தளபதி சியா-உல்-அக் (General ZIA-UL-HAQ) கின் நண்பர் என்று நம்பப்படுகின்றவர். பாக்கித்தானில் உள்ள வரலாற்று முகாமை வாய்ந்த பல சீக்கிய கோவில்களின் (Gurdwaras) பாதுகாப்பு, பிற, ஏந்துகளுக்காகப் பாக்கித்தான் தலைவரிடம் இருந்து நிறைய உதவிகளைப் பெற்றுத் தந்தவர். புதுத் தில்லியில் உள்ள சில ''உயர்தலைவர்க''ளைச் சந்தித்தபின் அமெரிக்காவிற்குத் திரும்பியுள்ளார்.

'மாநாட்டில்' பேசிய திரு. தில்லான், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் சீக்கியர்களுக்கு மட்டுமின்றிப் பிற நாடுகளிலும் வாழும் தம் இன மக்களின் நலன்களுக்கான பாதுகாப்புத் தேடும் ஐந்து கொள்கைத் திட்டம் ஒன்றினை அறிவித்தார். பாலத்தீனிய விடுதலை இயக்கம், (Palestine Liberation Organisation) சோவியத்து உருசியாவில் இருக்கும் உக்ரேனிய நிகரமை சோவியத்துக் குடியரசு (Ukranian Socialist Soviet Republic) ஆகியவற்றை எடுத்துக் காட்டி, சீக்கியர்கள் நாட்டிற்கும் ''இணை உறுப்பினர்' (Associate Membership) தகுதிபாவது ''உலக நாடுகள்'' (United Nations) அமைப்பில் பெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். ''சீக்கியர்கள் ' இந்து'' குமுகாயத்தின் ஒரு பகுதியினர் அல்லர் என்றும், அவர்கள் உறுதியாகச் சிறுபான்மையினர் அல்லர் என்றும்,சீக்கியர்கள் சென்று வாழும் உலகின் எல்லா நாடுகளிலும் அவர்களுக்குத் தனித்த பொருளியல், பண்பாட்டு நலன்களைப் (Economic And Cultural Interests) பெற்றுள்ளார்கள்'' என்றும் உறுதியாகக் கூறினர்.

www.thamizham.net - Free E book No 7511

'சீக்கியர்களுக்காகத் தாம் தனி நாடு ஏதும் கேட்கவில்லை விரும்புவதெல்லாம் "உலக நாடுகள்" அமைப்பில் இணை உறுப்பினர் சேர்க்கையே' என்று திரு தில்லான் கூறியபோதும், அவரது பேச்சைக் கூடியிருந்தவர்களில் பலரும் சீக்கியர்களுக்கான தனி ஒரு நாடு கேட்பதே எனப் பொருள்படுத்திக் கூறினார்கள். நிகாங் (Nihang) சீக்கியர்கள் நிரம்பியதும், போராட்ட மனப்பாங்குடைய சீக்கிய இளைஞர்களின் அமைப்பான "தால் கல்சா" (Dalkhalsa) வின் உறுப்பினர்கள், "சீக்கிய நாடு" நீடுழி வாழ்க (Long Live Sikh State) என்று உரக்கக் குரல் எழுப்பி, திரு. தில்லானின் பேச்சை வரவேற்றனர். வெளிநாடுகளில் வாழும் சீக்கியர்களின் நலன்களைப் பாதுகாக்க உலகநாடுகள் அமைப்பு தலைமையிடத்தில் (U. N. Head Quarters) "பன்னாட்டுச் சீக்கியச் செயலகம்" (International Sikhs Secretariat) ஒன்றை நிறுவ வேண்டுமெனவும் அவர் கருத்துக் கூறியுள்ளார்.

தமிழின, மொழி, நாட்டு நலன்களைப் பேணுவதையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட தமிழ்த் தேசிய அரசியலில் எப்படிப் பிளவுகளும் உட்பகையும் தோன்றியுள்ளனவோ, அதேபோல் சீக்கிய தேசிய அரசியல் கட்சியான "அகாலி தல" (Akali Dal) விலும் பிளவும் பகையும் உள்ளன. திரு. தில்லான், மாநாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற அகாலி தல உறுப்பினர்களைக் குறை கூறியது பற்றி (கடமை தவறும் தி. மு. க, அ. தி. மு. க உறுப்பினர்களைத் தமிழின நலன் பேணுபவர்கள் குறை கூறி எச்சரிப்பது போல) பெரும்பான்மைப் பிரிவு அகாலி தலத்தின தலைவர் திரு. சான்ட் அர்ச்சண்ட் சிங் லோங்கோவல் (Mr Sant Harchand Singh Legewal) பஞ்சாப் மாநில முந்நாள் முதல்வர் திரு. பிரகாசு சிங் பதல் (Mr. Prakash Singh Badal) மற்றும் பலர் வருத்தம் தெரிவித்துள்ளார்கள். வரும் சூன் திங்களில் அமெரிக்காவில் சான் பிரான்சிசுகோ நகரில் நடக்க இருக்கும் பன்னாட்டு அகாலி மாநாட்டில் (International Akali Conference), திரு. தில்லான் தங்களைப் பற்றிக் கூறியவற்றைச் சொல்லி எதிர்த்து வழக்காடப் போவதாக அகாலி தலப் பெரும்பான்மைப் பிரிவு உயர் மட்டத் தலைவர்கள் கூறியுள்ளார்கள். அகாலி தல் கட்சியின் அமெரிக்கக் கிளையின் தலைவர் திரு. சுக்மட்சிங் (Mr. Sukhmad Singh) அவர்களிடம் சாண்டிகார் நகரில் நடைபெற்ற மாநாட்டு நடவடிக்கைகள் பற்றி ஏற்கனவே இத்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்

சிறுபான்மை அகாலி தலக் கட்சியின் தலைவர் திரு. சே. எசு. தல்வண்டி (Mr. J. S. Talwandi) திரு தில்லானின் "உலக நாடுகள்" (U. N) அமைப்பில் சீக்கியர்களுக்கான "இணை உறுப்பினர்" தகுதி பெறுவது, அவர்களுக்கான "பன்னாட்டுச் செயலகம்" அமைப்பது

(தொடர்ச்சி 40-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7511

தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்

— பெருஞ்சித்திரனார்.

உ. வளர்ச்சி விளைவுகள்

தென்மொழியால் உணர்வூட்டப்பெற்ற தனித்தமிழ் அன்பர்களையெல்லாம் ஒன்று திரட்டிப் பாவாணர் தலைமையிலும் பெருஞ்சித்திரனார் செயன்மையிலும் உலகத் தமிழ்க் கழகம் (1968) ஒன்று தோற்றுவிக்கப் பெற்றது. தமிழ் நாடெங்கிலும் அதற்குக் கிளைகள் அமைந்தன. 1969-இல் பறம்புக் குடியிலும், 71-இல் மதுரையிலும், 78-இல் சென்னையிலும் அக்கழகம் மாநாடுகளை நடத்தியது. பாவாணரின் தமிழ் ஆராய்ச்சித்துறை நூல்களும், பெருஞ்சித்திரனாரின் தனித்தமிழ் இலக்கிய நூல்களும் பல்லாயிரக் கணக்கில் மக்களிடம் பரவித் தனித்தமிழ் உணர்வைப் பேரளவில் வளர்ச்சியுறச் செய்தன. தென்மொழி 1974-இல் சென்னைக்கு மாற்றப்பெற்றது. அதன் ஆசிரியர் 74-இல் சிங்கை-மலேசியப் பகுதிகளுக்கு மூன்று மாதம் சுற்றுச்செலவு செய்து, நாற்பதுக்கும் மேற்பட்ட கூட்டங்களில் தனித்தமிழில் பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவாற்றித் திரும்பினார். 78-இல் இலங்கை சென்று பதினான்கு நாட்கள் தொடர் சொற்பொழிவு செய்து மீண்டார். தமிழகமெங்கணும் உள்ள கல்லூரிகள், பள்ளிகள், மன்றங்கள், கழகங்கள் இவற்றிலெல்லாம் கடந்த இருபது ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான தலைப்புகளில் தூயதமிழ்ச் சொற்பொழிவுகள் செய்தும், நூற்றுக்கணக்கான தனித்தமிழ்த் திருமணங்களை நடத்தியும், மூலைமுடுக்கெல்லாம் தனித்தமிழுணர்வு கிளர்ந்தெழும்படி செய்தார்; செய்து வருகிறார். பாவாணரின் நூல் வெளியீடுகளாலும், பெருஞ்சித்திரனாரின் நூல்கள், தென்மொழி, தமிழ்ச்சிட்டு வெளியீடுகளாலும், சொற்பொழிவுகளாலும் ஆங்காங்கே பல்லாயிரக்கணக்கான அன்பர்களும் மாணவர்களும் ஆசிரியர்களும் தனித்தமிழ்ப் பற்றாளர்களாக மாறிவருகின்றனர். பல நூற்றுக் கணக்கான மன்றங்களும், கழகங்களும் ஆங்காங்கே தோற்றுவிக்கப் பெற்றுத் தனித்தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றுள் புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றம், அவினாசி திரு. வி. க. மன்றம், கோவை சேரர் கொற்றம், ஆலாந்துறை தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைக்குடி தமிழியக்கப்பாசறை, நெல்லைத் தமிழ் மன்றம், பாளையங்கோட்டை தனித்தமிழ்க்கழகம், புதுவைத் தனித் தமிழ்க் கழகம், சேலம் முத்தமிழ்க் கூடல், திருப்பூர் தமிழிலக்கியப் பேரவை, பல்லடம் திருக்குறள் மன்றம், திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகம், ஈப்போ, பாவாணர் தமிழ் மன்றம், சிங்கை இலக்கியக் கலை மன்றம், நெய்வேலி உலகத்தமிழ்க் கழகம், பாவாணர் தமிழ்க் குடும்பம், புதுக்கோட்டை பெருஞ்சித்திரனார் படிப்பகம், வெங்காலூர்

www.thamizham.net - Free.E book No 7511

உ. த. கழகம், தாராபுரம் தமிழ்க்கலைமன்றம், ஏரல், கொற்கைத் தமிழ் மன்றம், திருவெறும்பூர் நற்றமிழ்ப் பேரவை, வெங்காலூர் மறைமலையடிகள் நூல் விற்பனையகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தனித்தமிழ் இயக்கம், திருச்சி இளங்கோ பொத்தக நிலையம் இன்னும் பல ஊர்களில் உள்ள உலகத் தமிழ்க் கழகக் கிளைகள் முதலியவை குறிப்பிடத்தக்கன. புன்செய்ப்புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றத்தினர், மறைமலையடிகள், பாவாணர், பாவேந்தர், திரு. வி. க ஆகியோரின் பொன்மொழிகள் அச்சிட்ட அஞ்சலட்டை, உள்நாட்டு உறைகள் ஆகியவற்றைப் பரப்பித் தனித்தமிழுணர்வையும் அறிவையும் தொடர்ந்து ஊட்டி வருவதும். இலவயத்தமிழ் வகுப்பு நடத்தி வருவதும், தென்மொழிக்கும் பாவாணர்க்கும் நன்கொடை நல்கியதும், பாவாணர் நூல்களை அச்சிட்டுப் பரப்பியதும், அம்மையப்பர் கோயிலொன்றைக் கட்டுவித்துத் தூயதமிழில் வழிபாடு, திருவிழா முதலியவற்றை நடத்துவிப்பதும், அக்கோயிலில் உள்ள இறைவர் பெயர்களைத் தூய தமிழில் எழுதுவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கன. அதுபோலவே 1975 முதல் நெய்வேலி உ. த. க. ஆண்டுதோறும் தனித்தமிழில் நாள்காட்டிகள் அச்சிடுவித்து விற்பனைக்குத் தருவதும் சிறந்தத் தனித்தமிழ் வளர்ப்பு நிகழ்ச்சியாம். இக்கால் (1981) கோலார் தங்கவயல் உ. த. க, முன்னதினும் சிறந்த முறையில் தமிழ் நாள்காட்டியை அச்சிடத்தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. பாளையங்கோட்டை தனித்தமிழ் இலக்கியக் கழகம் ஆண்டுதோறும் கட்டுரைப் போட்டி வைத்துத் தனித்தமிழில் நூல்கள் எழுதச் செய்து அவற்றுள் சிறந்ததற்குப் பரிசும் சுழற்கோப்பையும் வழங்குவது சிறப்பான நிகழ்ச்சியாம். திருவாரூர் இயற்றமிழ் பயிற்றகம் புலவர் வகுப்பு நடத்தியும் திரு. வி. க. சிலை திறப்புச் செய்தும் பொதுமக்கள் அறிவதற்கெனத் தனித்தமிழில் சிறுசிறு நூல்களை வெளியிட்டும் அரிய தொண்டு செய்து வருகின்றது.

'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டை'த் தொடர்ந்து ஆங்காங்கே பல தனித்தமிழ் இதழ்கள் தோற்றுவிக்கப் பெற்றன. மதுரை. பேரா. தமிழ்க்குடி மகன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'அறிவு', புலவர் இறைக்குருவனார் அவர்களின் 'பாவை' 'வலம்புரி', சென்னை செ. பன்னீர்ச் செல்வம், உலகமுதல்வி அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'தமிழம்' இலக்குவனார் அவர்களின் 'குறள்நெறி', காரை. இறையடியான் அவர்களின் 'பூஞ்சோலை', சென்னை, பாவலர் மு. மகிழரசன் அவர்களின் 'வல்லமை', சேலம். தி. வை. சொக்கப்பனார், புலவர். சின்னாண்டார் அவர்களின் 'முதன்மொழி', புலவர். வி. பொ பழனிவேலனார் அவர்களின் 'மாணக்கன்', மதுரை. க. வெ. நெடுஞ்சேரலாதன் அவர்களின் 'தீச்சுடர்', த. ச. தமிழனின் 'தமிழோசை', புதுவை அருளி அவர்களின் 'தமிழ்ப்பறை', தஞ்சை இசையறிஞர் சுந்தரேசனார் வெ. மு. பொதியவெற்பன் அவர்களின் 'நித்திலம்', புதுவை மன்றவாணனின் 'நெய்தல்' சென்னை, ஓவியப்பாவலர். மு

www.thamizham.net - Free E book No 7511

வலவன் அவர்களின் 'வண்ணச்சிறகு', தாங்கை-பன்னீர்ச் செல்வன் அவர்களின் 'வேந்தம்', கோவைத் தொழில் நுட்பக் கல்லூரி வெளியீடான 'தொழில் நுட்பம்', பழனி மணிமுத்து அவர்களின் 'தமிழ்ச் சுடர்', சென்னை. ந அரண முறுவலின் 'தமிழியக்கம்', வெங்காலூர் உ.த.க. வின் 'மீட்போலை' முதலியவை குறிப்பிடத்தக்கன. இவற்றுள் பல, சிலகாலம் நடந்து இடை நின்று போயின. சில தொடர்ந்து நடந்து வருகின்றன.

தனித்தமிழ்க் கொள்கையை ஏற்று இக்கால் அறிஞர்கள், பேராசிரியர்கள், தமிழன்பர்கள் பலரும் ஆங்காங்கே எழுதியும் கூட்டங்களில் பேசியும் வருகின்றனர். அவர்களுள் முகாமையானவர்கள் சிலர் : பேரா. வ. சுப மாணிக்கனார், பேரா. தமிழ்க்குடிமகன், புலவர். இறைக்குருவனார், புலவர். இரா. இளங்குமரன், தென்மொழி மறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக் குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி, ந. இளமாறன், த. ச. தமிழனார், இராவணன், தமிழப்பன், பேரா. இரா. இளவரசு, பேரா. பா. மெ. சுந்தரனார். பேரா.கோ. நிலவழகனார், பேரா. தி. வை. சொக்கப்பனார், பேரா. ம. இலெ. தங்கப்பனார், பாவிசைக்கோ, பேரா. கு. வெ. கி. ஆசான், பேரா. இரா. மதிவாணனார், பேரா. க. ப. அறவாணனார், செங்கை. செந்தமிழ்க் கிழார், செங்கைப் பொதுவன், புலவர். தி. நா. அறிவுஒளி, குடந்தை. கதிர். தமிழ்வாணனார், பேரா. கு. பூங்காவனம், பேரா. பசுபதி, பேரா. ம இரா. பூபதி, பேரா. தாயம்மாள் அறவாணன், பேரா. வி. மு. சோமசுந்தரனார், புலவர். வி. பொ. பழனிவேலனார், பாவலர். பாலசுந்தரனார், புலவர். மி. மு. சின்னாண்டார், பேரா. வீ இராசமாணிக்கனார், நீ. தங்கவேலனார், குமர. தன்னொளியன், பேரா. மு. சதாசிவம், பேரா. வீ ப. க. சொல்லழகனார், புலவர். ச. சிவசங்கு. புலவர். அ. நக்கீரனார், சிவத்திருமணி பேரா. ப. சு. மணியம், பேரா. பா. வளனரசு, திரு. சி. சு. மணி. வேலா, அரசமாணிக்கனார், புலவர். க. தமிழ்மல்லன், தமிழூர். ப. அருளி, மருத்துவர் கோவிந்தனார், புலவர் மருதவாணன், பேரா. தே. உலூர்து, புலவர். செ. இராசு. புலவர். பொன்முகிலன், 'பிராமணீயம்' ஆசிரியர். சோ. தமிழ்மகன், அரங்க. தமிழ்மணி, மின்பாவை. கி. பாலு, சி. அரசிலமறவன், இறைமகிழ்நன், நா.எழில் மகிழ்நன், வெங்காலூர் முத்துச் செல்வன், த. அறவாழி, க. குழந்தைவேலன், இரா. அருட்குவை, இரா. பாவாணன், புலவர். இல.மா. தமிழ்நாவன், சிங்கப்பூர். தமிழ்முரசு ஆசிரியர் மெ. சிதம்பரனார், பாவாடைச்சாமி, பாவலர். முல்லைவாணன், பாவலர். பொன் அன்பரசன், இறைவாணன், பாவலர். பரணன், ஈப்போ, பாவாணர் மன்ற அமைப்பாளர் பாவலர் சா. சி. சுப்பையா, பாவலர். எல்லோன், பொன்னரசன், உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத் தலைவர் இரா. ந. வீரப்பன். இலங்கை பண்டிதர். கா. பொ. இரத்தினம், இங்கிலாந்து முரு. குழ. வீரசிங்கம்.

www.thamizham.net - Free E book No 7511

அரங்க-முருகையன் முதலிய நூற்றுக்கணக்கானவர். (நூலுள் அனைவர் பெயர்களும் குறிக்கப்பெறும்)

இனி, சிறந்த தனித்தமிழியக்கத் தொண்டர்களாக நாடோறும் கருத்துப்பரப்பல் செய்யும் மெய்யன்பர்கள் ஆயிரக்கணக்கில் உளர். அவர்கள் அனைவரின் பெயர்களையும் இக்கட்டுரையில் குறித்தல் இயலாது. முகாமையான சிலர்மட்டும் இங்குக் குறிக்கப் பெறுவர். (மற்றவர் நூலுள் குறிக்கப்பெறுவர்) தென்மொழி. ப. முருகவேள், புலவர். ந அ. அண்ணாமலை, கொட்டமிட்டா புலவர். மு ஆறுமுகம், தென்மொழி. கோ. நக்கீரன் திருமால்பேறு, ம. செ. தமிழ்மணி, த. வளங்கோ, அரிமா மகிழ் கோ, கந்த. கண்ணன், த. தமிழ்த்தென்றல், அடல் எழிலன், பொற்செழியன், வை. தமிழ்க்குமரன், நடுப்பட்டி, மு. வ. பரமசிவம், திருச்சி. இரா. மகிழ்நன், குழந்தை ஈகவரசன், நாவை. சிவம், புலவர். கருவூர்பாரி, பாவை. நடவரசன், சி. வெ. தமிழ்மாணிக்கம், மாரி. விசுவநாதன், கி. பெருமாள். பாவலர். தமிழ்க்குமரன், பாரி. மணியம், மா. அரசு, மும்முடிமுகிலன், அருள் இறைவோன், சோ. ஆற்றலரசு, அறிவன் அன்பு மலர், த. அன்பழகன், த. சின்னத்துரை, வி. செ. வேலிறையன், இரணியன், துரை-மடங்கன், கல்லை. பெருஞ்சித்திரன், பொன்-மணிமொழி, மு பொன்னவைக்கோ, மா, பூங்குன்றன், மா. பொழிலன் முதலியோராவர்.

பாவேந்தரின், 'சுணிப்பரிதாம் துன்பமிது தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ்தானில்லை' என்ற கருத்தைக் கண்டு நொந்து, தனித் தமிழ் இயக்கத்தார் அக் குறையைப் போக்க அரிய முயற்சிகள் பல செய்தனர். இவ்வகையில், கோவை. தென்மொழி மறை நித்தலின் பனுர், தென்மொழி இளமாறன் ஆலாந்துறை, தமிழாசிரியர். ந. இரா. தமிழ்வேள் முதலியோர் முயற்சியால், கோவை நகரில் விளம்பரப் பலகை தமிழ்ப்படுத்த முயற்சிகள் மிகச் சிறப்பாக நடந்துள்ளன. அங்கு உள்ள பெரும்பாலான விளம்பரப் பலகைகள் தூயதமிழில் இன்றும் விளங்குவது, நல்ல தனித்தமிழ் வளர்ச்சியைக் காட்டுவதாகும். சான்றுகச் சில பெயர்ப்பலகைகளின் தூயதமிழ் வரைவுரைகள் கீழே தரப்பெறுகின்றன.

Dry Cleaners—உலர்சலவையகம்
Teenage Bazaar—பதினகவைஅங்காடி
'Biriyani' Hotel—புலவு உணவகம்
Knitting Company—பின்னல் குழுமம்
Dress Land ஆடை உலகம்
Fabrics—தறிப்பொருள்கள்
Hoisery Mills—உள்ளுடை ஆலை
Bombay Dying—பாம்பே வண்ணகம்
Coffee House—குளம்பியகம்
Chit Funds—சீட்டுக்குவையம்
Hotel—உணவகம்
Bakery—அடுமனை
Tailors—தையலர்
Biscuit—மாச்சில்,
Cake—அணிச்சல்
Elastics—நீட்டிழைகள்
Bread—பிசைபப்பம்
Canteen—அருந்தகம்
Lodge—தாவளம்
Machanicals—பொறிவகையகம்

www.thamizham.net - Free E book No 7511

Fancy Sarees—புனைவழகுச் சேலைகள்
ginning factory—பஞ்சரவைத் தொழிற்சாலை
Readymade Hall—அணிய ஆடைக்கூடம்
காதிவஸ்திராலயா — கைந்நூல் ஆடையகம்
Sound Service — ஒலிப்பெருக்கி அகம்
Machinary Mart — பொறிவகைச் சிற்றங்காடி
Electronic Components — மின்னணுவியல் பகுதிப்பொருள்கள்
Lorry Transport — சரக்கியங்கிப் போக்குவரத்து
Finance Corporation — கடனுதவி இணையம்
Ice Factory—பனிக்கட்டித் தொழிலகம்
Timber Mart — வெட்டுமரச் சிற்றங்காடி
Rolling Shutters — சுருட்டுக்கதவுகள்.

இதுபோலும் விளம்பரப் பலகைத் தமிழ்ப்படுத்த முயற்சிகள் புதுவைத் தனித்தமிழ்க் கழகத்தினராலும், புதுச்சேரி தமிழ்க் காவற் குழுவாலும் மேற்கொள்ளப் பெற்று, ஆங்குள்ள பெரும்பாலான விளம்பரப் பலகைகள் தூயதமிழில் இயங்கும்படி செய்யப்பெற்று உள்ளன. மற்றும் மதுரையிலும் சிவகாசியிலும் இது போலும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

இனி, கடந்த சில ஆண்டுகளில் தனித்தமிழில் இலக்கியங்களும், நூல்களும், பெரிய அளவில் வெளிவந்துள்ளன. பாவாணர் தூயதனித் தமிழில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட ஆய்வு நூல்கள் எழுதியுள்ளார். பெருஞ்சித்திரனார் பதினைந்துக்கு மேற்பட்ட பாவியல் நூற்களும், உரைநடை நூற்களும், எழுதியுள்ளார். புலவர். இரா. மதிவாணன், 'இலெமூரியா முதல் அரப்பா வரை', 'தமிழ்வளர்ச்சி', சாதிகளின் பொய்த்தோற்றம், முதலிய பத்துக்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார், புதுவைத் தனித்தமிழ்க்கழக அமைப்பாளரும் செயலரும் ஆகிய க. தமிழமல்லன் 'தனித்தமிழ்' வரலாறு என்றொரு சிறு நூல் எழுதியுள்ளார். கோவை, தமிழ்மகன் என்பார்' பிராமணீயம் (1974) என்ற அரிய வரலாற்று நூலைத் தூய தனித்தமிழில் எழுதி வெளியிட்டுள்ளார், ஓவியப்பாவலர் வலவன் 'தமிழ் வளர்த்த சான்றோர்கள்' என்றொரு நூலைத் தூயதமிழில் வெளியிட்டுள்ளார். பொதுவுடைமை அறிஞர் வெங்காலூர் 'குணா' (குணசீலன்) தூய தனித் தமிழில் 'மார்க்சிய இயங்கியல்', 'சாதியத்தின் தோற்றம், 'தமிழர் மெய்யியல்' முதலிய நூல்களை எழுதியுள்ளார். பாம்பூர் முத்துக் குமரனார் பெருஞ்சித்திரனாரின் தனித்தமிழ்ப் பாடல்கள் பலவற்றையும், சில நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். வரலாற்றாசிரியர் பேரா. கோ. தங்கவேலனார் அவர்கள் 'தமிழ் நில வரலாறு' என்றும் அரிய, அறுநூறு பக்க வரலாற்று நூலைத் தனித்தமிழிலேயே எழுதியிருப்பதும். அது தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தினரால் வெளியிடப் பெற்றிருப்பதும் மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கதாகும்.

www.thamizham.net - Free E book No 7511

அதில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பெற்றுள்ளன. திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றக இயக்குநர் புலவர். த. ச. தமிழனார் தனித்தமிழில் 'தமிழ்நூல்' (1972) என்றோர் இலக்கணநூல் உட்படச் சிலநூல்களை எழுதியுள்ளார் 'குறு' எழுதிய பொதுவுடைமை நூலான மார்க்சிய இயங்கியலில் பயன்படுத்திய தூய தனித்தமிழ்ச் சொற்கள் சில, Alcohal—வெறியம், Cortex—புறணி, Crystal—படிமம், Dictatorship—வல்லாண்மை, Fther—விண்மம், Fossil—தொல் எச்சம், Gas—வளி, Helium—கதிரகம், Insulin—கணைய நீர்மம், Nebula—ஒளிமுகில், Radon—கதிரம் முதலியன.

அரசுத் துறையில் புலவர் அ. நக்கீரன் என்பார் நல்ல தனித் தமிழ் உணர்வினர்; கொள்கையினர். அவர் தமிழக அரசின் கீழ் உள்ள அரசுப் பாடநூல் வெளியீட்டு நிறுவனத்தில் பணியாற்று பவராக இருப்பதால், அரசுப் பாட நூல்கள் வெளியீட்டில் கூடிய வரை, தூய தனித்தமிழ்ச் சொற்களைப் பாடநூல்களில் கையாண்டு வருகின்றார். 'தமிழம்' ஆசிரியர் செ. பன்னீர்ச் செல்வம் அவர்கள் நடுவணரசில் அஞ்சல் துறையில் ஒரு பொறுப்புள்ள அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். அவர் அத்துறை வெளியீடுகளை வாய்ப்புக் கிடைக்கும் பொழுது நல்ல தனித்தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்து வருகிறார். சான்றாக அவரால் 1975-இல் மொழிபெயர்த்துக் கொடுக்கப் பெற்ற கிளை அஞ்சல் அலுவலக (Branch Post Office) விதிகள் என்னும் நெறிமுறை நூலில், அஞ்சல் அட்டைகள், முத்திரை, அஞ்சலுறை, திறவுகோல், இலாஞ்சனை (அடையாள முத்திரை), பதிவுக் கடிதம். சேமிப்புச் சான்றிதழ் (Savings Certificate), பண விடைத் தாள், உருப்படி (Article), கொடுப்பனைச் சான்று (Acknowledgement), முகப்பு வரிச்சீட்டு, பதிவுப்பட்டி, சிப்பப்பட்டி, காப்புறுதி உருப்படி (Insureance article), வைப்பீட்டாளர் (Depositor), வானொலிப் பெட்டி உரிமம் (Radio liecence), ஒப்படைப்பு (Delivery) கையேடு (Hand Book), காப்புப்பேழை, கண்காணிப்பாளர் (Superintendent), விலை கொடுப்புப் பணவிடை (Value payable Money order), ஆவணங்கள் (Documents), தீர்வை அலுவலர் (Customs officer), பணித்துறை, (Service), பதிவுப் பட்டி (Register receipt), கட்டளைப் புத்தகம் (Order Book), சொந்தப் பிணையம் (Personal Surety), படிவம் (form), உயிர் காப்புறுதி (Life Insurance), கரித் தாள் (Carbon paper), கடிதப் பெட்டி (Post Box), கீழ் நிலைத் தேர்வுப் படிநிலை (Lower Selection grade), அளவீட்டு ஊதியம் (Time scale), பலகணி ஒப்படைப்பு (Window delivery), விலை கொடுப்பு உருப்படி (Value paybale article) ஒப்படைப்பு முகவாண்மை (Delivery Agent), அயல் நாட்டுக் கடிதம் (Foreign letter), வானஞ்சல் (Air Mail). கோரப் பெறாத உருப்படி (unclaimed article), அன்றாடக் கணக்கு (Daily account), சுங்கத் தீர்வை (Customs Duty), ஓய்வூதியம் (Pension), தரகு (Commission),

www.thamizham.net - Free E book No 7511

திரள் குவிக்கால் குறிப்பீட்டு வைப்புக் கணக்கு (Cumalative Time Deposit), பிழைப் புத்தகம் (Error Book) முதலிய நூற்றுக் கணக்கான தூய தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பெற்றுள்ளன. அவர் முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது.

மற்றும் பண்ணுய்வறிஞர் குடந்தை ப. சுந்தரேசனுர் தூய தமிழில் இசை நுணுக்கங்களை நூல்வடிவில் வெளியிட்டு வருவதும். அவற்றைப்பற்றி நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருவதும் குறிப்பிடத்தக்கன. இவர் ‘முதலேந்திசைப்பண்கள்’, ‘இசைத்தமிழ்ப் பயிற்சிநூல்’ முதலியவற்றை வெளியிட்டுள்ளார். தமிழிசைப் பண்களின் பெயரடைவை நூற்றுக்கணக்கில் பெரிய அளவில் அச்சிட்டுக் கண்ணுடிச் சட்டமிட்டு அறிஞர் பலர்க்கும் கொடுத்துள்ளார். இத்துறையில் இளம் இசைப்புலவர் சுரும்பியனும், பாவலர் தமிழநம்பியும் பலவகையான தனித்தமிழிசையாராய்ச்சிகளைச் செய்து வருவதும, தனித்தமிழ் இசைப்பாடல்களை எழுதி, இசைத் தட்டில் பதித்திருப்பதும் அறியத்தக்கன. நெய்வேலியில் கோ. தனிமகன் என்னும் தனித்தமிழ் ஆர்வலர் செந்தமிழிசைக்குழு ஒன்றமைத்துத் தக்கப் பாடகர்களைப் பல்வகை இசைக்கருவிகளுடன் பாவேந்தர், பெருஞ்சித்திரனுர் பாவாணர் ஆகியோரின் தனித்தமிழ்ப் பாடல்களை ஊர்தொறும் பொதுமக்கள் முன்னிலையில் பாடுவித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும் சித்தோடு பாவலர் குமர நடவரச ஈவப்பனும், மூர்த்திக்குப்பம் திருக்குறள் பெருமாளும் பாவேந்தரின் தமிழியக்கப் பாடல்களையும் தென்மொழி, தமிழ்ச்சிட்டுப் பாடல்களையும் நாள்தோறும் பொதுமக்களிடையும், மாணவர்கள், ஆசிரியர்கள் தம்மிடையும் விரைந்து பாடித் தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருவது மகிழ்வுடன் குறிப்பிடத்தக்கதாகும்.

பூதவியல் பேராசிரியர் திரு. இல. க. இரத்தினவேல் அவர்கள் தென்மொழியில் தொடர்ந்து பல அறிவியல் கட்டுரைகளை எழுதி வருவதுடன், 1970-இல் தென்மொழி இதழில் தனிமப்பட்டியல் முழுவதும் தூயதமிழில் அணு எண், ஆங்கிலக் குறியீடு தனிமப்பெயர்கள் முதலியவற்றுடன் ஒரு பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். அப் பட்டியலில் உள்ள சில தனிமச் சொற்களின் பெயர்கள் வருமாறு :

Rodium — ஆரயன்	Thallium — தளிரம்
Rodon — ஆரகன்	Phospharus — பொசுப் பொறை
Calcium — காளம்	Chromium — குருமியம்
Oxygen — உயிரியை	Helium — எல்லியம்
Prasodymium — பசியம்,	Aluminium — அளமியம்.

அறிவியல் சொற்களைத் தனித்தமிழ்ப் படுத்தம் என்பது மிகவும் கடினமான பணி, வழக்கிலுள்ள வடசொற்களுக்கு மட்டும் தமிழ்ச்சொற்கள் காணுதல் என்பதோடு இஃது அமைந்து விடுவதன்று. ஆங்கிலக்

www.thamizham.net - Free E book No 7511

கலைச்சொற்களுக்கும், சில அறிவியல் சொற்களுக்கும் ஏற்ற புதுச் சொற்களை அமைத்தல் மிகவும் இடர்ப்பாடானது. சொற்களின் சரியான பொருளும், மூலமும், வேரும் தெரிந்துதான் இதைச்செய்ய முடியும். குருட்டுத்தனமாக ஒரு சொல்லை உருவாக்க முடியாது. மேலும் இதற்குத் தூயதமிழ்ப்பற்றும் மொழியியல் அறிவும் மிகவும் இன்றியமையாதன. சென்னை, மாநிலத் தமிழ்ச் சங்கத்தார். 1938-இல் 'கலைச்சொற்கள்' என்ற பெயரில் ஒரு நூல் வெளியிட்டனர். பெரும்பாலும் அந்நாளில் இருந்த பள்ளிப்பாடநூல்களில் அத்தகைய சொற்களே தமிழ்ச் சொற்களாகவிருந்தன. அவற்றுள் சில வருமாறு: 'க்ஷாரம், ஆஹாராசமிகரணம், ஹரிதகிகாமலம், அப்ஜகிரத்தகிகாமலம், சங்கோஜயத்வம், பிரதிலோம, விபாஜியத்துவம், வக்ரபாவித்வம், ஆபாஸபிம்பம், ஜ்யாமிதி, கிருஷித்தொழில் முதலியன. இச்சொற்களைப் பார்க்கையிலும் படிக்கையிலும் தென்மொழிக் காலத் தனித்தமிழன்பர்களின் மொழி பெயர்ப்புகள் எவ்வளவு அறிவும் அழகும் தமிழார்வமும் மிக்கன என்பது தெரியும். இனி, அதே 1938-இல் வெளிவந்த 'தமிழ்ப்பொழில்' — கரந்தைக் கட்டுரைத் தொகுப்பில், 'கந்தகமும் கந்தகைகளும்' என்றொரு கட்டுரையைத் திருவில்லிப்புத்தூர் அ. சீனிவாசாசாரியார் என்பவர் எழுதியிருந்தார். அதில் பல தூய தமிழ்ச்சொற்கள் பயன்படுத்தப் பெற்றிருந்தன. இனி, நாம் இன்னொன்றையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். பலர், பல அறிவியல் சொற்களுக்கு மொழிபெயர்ப்பாக அல்லது சொல்லாக்கமாகப் பற்பல தமிழ்ச்சொற்களை உருவாக்கி வெளியிட்டுள்ளனர். ஆனால், காலப்போக்கில், எது சரியோ — மக்கள் வழக்குக்கு எளிதாக உள்ளதோ அது அல்லது அவை நிலைத்துவிட்டுப் போகட்டுமே. அவற்றின் நிலைப்பாடு, பொருந்து நிலைபற்றியெல்லாம் நாம் இப்பொழுது ஏன் ஆய்வு செய்து கொண்டு கிடக்க வேண்டும்? தொடக்கத்தில் மிதிவண்டிக்கு, ஈருருளி, இருசக்கரவண்டி என்றெல்லாம் மொழிபெயர்த்தார்கள். மிதிவண்டிதானே நிலைத்தது.

இனி. காரைக்குடி அழகப்பர் தமிழ்மன்றம் 1970-இல் அறிவியல் கலைச் சொற்பட்டி ஒன்று வெளியிட்டது. நெய்வேலி உ. த. க. வினர் மறைமலையடிகளாரின் 98-ஆவது பிறந்தநாள் வெளியீடாக 'தொழிற்பெயர் மொழியாக்கத் தொகுப்பு' ஒன்று வெளியிட்டார்கள். 1969-70-ஆம் ஆண்டு, திருநெல்வேலி மருத்துவக்கல்லூரித் தென்மொழியன்பர்கள், தம் கல்லூரி ஆண்டு மலரின் தமிழ்ப்பகுதியைத் தனித்தமிழிலேயே உருவாக்கியிருந்தார்கள். அதில் தமிழ் மொழியில் பிறமொழிக் கலப்பு கூடாது என்று ஆசிரியவுரையும் எழுதப் பெற்றிருந்தது. கோவைத் தொழில்நுட்பக் கல்லூரியில் 1967-68. 69-ஆம் ஆண்டுகளின் மலர்கள் அரிய தனித்தமிழ் அறிவியல் படைப்புகளாகவே வெளிவந்தன. அவற்றுள் பன்னூற்றுக் கணக்கான தூய தமிழ்ச் சொற்கள் உருவாக்கப் பெற்றிருந்தன. உறைத்த தென்மொழியன்பரும், புதுவை 'சிப்மேர்' மருத்துவக்கல்லூரி மாணவரு

www.thamizham.net - Free E book No 7511

மாயிருந்த க. அரிமா மகிழ்கோ என்பார் 1972-ஆம் ஆண்டு, கல்லூரி மலரைத் தூய தனித்தமிழ்க் களஞ்சியமாகவே கொணர்ந்-திருந்தார். அவர் அதில் எழுதியிருந்த மொழி விளக்க ஆசிரிய வுரையும், அம்மலருள் கையாண்டிருந்த அறிவியல் தனித்தமிழ்ச் சொல்லாக்கங்களும் எல்லாரையும் பெரிதும் வியப்புக்குள்ளாக்கின. இனி, 1969-ஆம் ஆண்டிலும் 70-ஆம் ஆண்டிலும் கிண்டி, பொறி யியற் கல்லூரியினின்று ஆயிரக்கணக்கான சொற்கள் கொண்ட 'அறிவியல் தனித்தமிழ்ச் சொற்பட்டி' நூற்கள் வெளியிடப்பெற்றன. (இவ்வெளியீடுகளின் அனைத்து விரிவான விளக்கங்களையும் சிறப்-பியல்புகளையும் இக்கட்டுரையாசிரியரின் முன்னர் குறிப்பிட்ட நூலுள் கண்டு கொள்க).

மேற்காட்டிய வெளியீடுகளெல்லாம் தனித்தமிழியக்க மாணவர் சிலரின் அரும் பெரு முயற்சிகளாகும். பேரறிஞர்கள் பலர் கூடிச் செய்ய முடிந்த வேலையை ஆசிரியர்கள் சிலர் துணையுடன், மாணவர் களே செய்தது மிகவும் பாராட்டத்தக்கதும், பரிசளிக்கத் தக்கதும் ஆகும். இவற்றுக்கு வெறும் தமிழ் இலக்கண இலக்கிய அறிவு மட்டும் போதாது. அறிவியலறிவு மிகவும் இன்றியமையாதது. மொழியாய்வுடன் மாந்த மனவியலறிவும் வேண்டும். அப்பொழுது தான் சொற்களை மக்களுக்குரிய மனப்பக்குவத்துடன் ஆக்கல் இயலும். தனித்தமிழ் அல்லது தூயதமிழ் பரவுவதற்கு இத்தகைய முயற்சிகள் மிகுதியும் செய்யப் பெறுதல் வேண்டும். அத்துடன், எங்கோ ஒரு மூலையிலிருந்து கொண்டு, (வாழ்வியல் தொடர்பான) தனித்தமிழ்ச் சொற்களை மட்டும் உருவாக்கி, வெளிப்படுத்திக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றை மக்களிடையில் (கற்றவர்களே யெனி னும்) கொண்டு சென்று பரப்பி அவர்களும் ஏற்குமாறு செய்தல் வேண்டும். அதற்கு முன்பாக அவர்களுக்குத் தாய்மொழி உணர் வூட்டுதலும், அறிவூட்டுதலும், வரலாறறிவித்தலும், இனப்பற்று உண்டாக்குதலும், அரசியல் தெளிவுறுத்தலும் மிகவும் முகாமையான முயற்சிகளாகும்.

இனி, கடந்த காலத் தனித்தமிழியக்க முயற்சிகளுக்கு அறிஞர்கள், மன்றங்கள், கல்லூரிகள், நிறுவனங்கள் இதழ்கள் இவையல்லாமல் தனிப்பட்ட பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டுத் தனித் தமிழ்த் தொண்டர்கள், தென்மொழியன்பர்கள் முதலியோர் அரும் பாடுபட்டிருக்கின்றனர். அவர்களில் மிகவும் முகாமையானவர்களில் சிலரைக் காட்டுவதெனினும் இக்கட்டுரை இடந்தராது. (அவற்றின் விரிவெல்லாம் நூலுள் கண்டு கொள்க) ஆனாலும், இக்கால் வளர்ந்-துள்ள தனித்தமிழியக்கத்தின் அளவு நூற்றுள் ஒரு பத்துப் பங்கு டையதே! இன்னும் தொண்ணூறு பங்கு இது வளர்தல் வேண்டும். அதற்கு நாமும், மக்களும் அரசும் என்னென்ன செய்தல் வேண்டும் என்பதைச் சுருக்கமாகக் கூறி இக்கட்டுரையை முடிப்போம்.

www.thamizham.net - Free E book No 7511

3. முடிவும் அடுத்துச் செய்ய வேண்டுவனவும் :

கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேல் செய்யப்பெற்ற தொடர்ந்த தனித்தமிழியக்க முயற்சிகளால் அளவிறந்த மாறுதல் அரசுத் துறையிலும், பொதுமக்களிடத்திலும், ஆசிரியர், மாணவர்களிடையிலும், சில இதழ்களிடையிலும் ஓரளவு நல்ல தமிழ் காணப்பெறுகிறது. இக்கால், தென்மொழியன்பர்கள் தொடர்பான திருமணங்கள் விழாக்கள் இவற்றின் அழைப்புகள் தூயதமிழில் அச்சிடப்பெறுகின்றன. வடமொழியெழுத்துகள் பயன்படுத்தம் குறைந்துள்ளது. வானொலியில் சில நேரங்களில் நல்ல தமிழ் ஒலிக்கின்றது. பாடநூல்கள் ஓரளவு தூயதமிழில் எழுதப் பெறுகின்றன. அரசுச் சார்பில் பல நிறைவான மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஆனால், இவை போதா. பொதுமக்களுக்குத் தமிழறிவு ஊட்டப் பெறுதல் வேண்டும். பள்ளி. கல்லூரிப் பாடப் பொத்தகங்கள் முழுவதும் தூய தனித் தமிழில் எழுதப் பெறல் வேண்டும். நாடு முழுவதும் உள்ள விளம்பரப் பலகைகள் அனைத்திலும் நல்ல தமிழ் மிளிர வேண்டும். செய்தித் தாள்கள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, முதலிய அனைத்திலும் நல்ல தமிழ் வழங்கச் செய்யல் வேண்டும். கலப்புத் தமிழ் எழுத்தாளர்களை மக்கள் மதிப்பது குறைய வேண்டும். ஊர்ப்பெயர்கள் ஆட்பெயர்கள், சமயத்தொடர்பான பெயர்கள் எல்லாம் தனித் தமிழில் இங்குலதல் வேண்டும். பல்துறை அறிஞர்களின் துணையுடன் இன்னும் ஏராளமான அறிவியல் கலைச்சொற்கள், வாழ்வியல் நடைமுறைச் சொற்கள் அனைத்தும் தூய தமிழாக்கப்படல் வேண்டும். இந்நிலைகளெல்லாம் வாய்க்கப் பெற்றால்தான் எதிர்காலத் தமிழும் தமிழரும் உலக நிலையில் மற்ற இனங்களைப்போல் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க இயலும் என்பதை உறுதியாகக் கொள்ளல் வேண்டும்.

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். ○

“ தமிழ்ச்சிட்டு ”

சென்னை-5

	உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடுகள்
ஆண்டுக்கட்டணம் உருபா	6-00	13-00	13-00
தனியிதழ் ”	0-50	1-25	1 25

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு ஓர் உருபா மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க!

www.thamizham.net - Free E book No 7511

தனித்தமிழ் இயக்கத்திற்கு அரசியற் பின்னணி அறவே இல்லை.

— சிங்காரம் பொற்செல்வன், வணி. இ; [ச. இ.]

ஈழத்திலிருந்து இரண்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் எழுவது நமக்கு மகிழ்ச்சி தருவதே. ஆயின் திரு. **கைலாசபதி** 'அடியும் முடியும்' என்னும் நூலில் காட்டிய ஆழத்தைப் 'பழந்தமிழர் வாழ்வும், வழிபாடும்' என்ற நூலில் எட்ட வில்லை. அதுபோன்ற திரு. கா. **சிவத்தம்பி** 'தமிழில் சிறு கதைகள்' என்னும் நூலில் சுட்டிய உண்மைகளைத் 'தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி' என்னும் நூலில் காட்டவில்லை.

இரு நூல்களில் சிவத்தம்பியின் 'தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி' என்ற ஒரு நூலின் மறுப்பே இக் கட்டுரையின் கருத்தாகும்.

"தனித்தமிழ் இயக்கத்தைத் தமிழ் உரைநடை பற்றிய ஓர் இயக்க மாகவே கொள்ளுதல் வேண்டும்" — 1

இது தனித்தமிழ் இயக்கத்தின் நோக்கத்தைக் குறுக்கும் சிவத் தம்பியின் முயற்சி. தனித்தமிழ் உரைநடைக்கு மட்டுமே என்ற கருத்தை மறைமலையடிகள் தம்நூல் எதிலும் காட்ட வில்லை. தூய தமிழில் துறைதோறும் முழங்கியவர் மறைமலையடிகள். தூய தமிழ்ப் பேச்சை, பரந்துபட்ட கலைச்சொல்லாக்கும் முயற்சியை ஏனோ மறந்து விட்டிருக்கிறார், அல்லது மறைத்து விட்டிருக்கிறார் — சிவத் தம்பியார். அடிகளாரின் தூய தமிழ்ப் பேச்சுக்கு ஆசிரியரே வேறி டத்தில் காட்டியிருக்கிறார். மறைமலையடிகளார் கடிதங்கள் — 2. என்ற நூல் சான்றுகிறது.

தனித்தமிழியக்கத்தையே சரியாகப் புரிந்துகொள்ளாத சிவத் தம்பி அதற்கில்லாத அரசியற் பின்னணியை ஆராயட்புகுந்தது, இல்லாத ஊருக்குச் செல்லாத பேருந்தைச் சொல்லிக் காட்டுவது வேடிக்கை! மறைமலையடிகளின் தனித்தமிழியக்கம் மேலோட்ட மாகப் பார்க்கும் பொழுது உரைநடை பற்றிய ஓர் இயக்கமாகத் தோன்றினும் ஆழ்ந்து நோக்கும் பொழுது தமிழர்களின் அரசியல், வரலாறு, குமுக அமைப்பு, சாதி அடிப்படை முதலியவற்றுடன் தொடர்புற்று நிற்கின்ற தென்பது தெள்ளத் தெரிகின்றது நூல் தலைப்பை நிறுவ முயல்கிற சிவத்தம்பியின் தவிப்பு-3- நமக்குப் புரிகிறது. அதனால் மறைமலையடிகளாரை அரசியல் வரை அழைத்துச் செல்வதும் தெரிகிறது. அவரே மேற்கோள் காட்டியிருக்கிற அடிகளின் நூல் முன்னுரைகளே இதை மறுக்கின்றன.

'பல்வேறுப்பட்ட உயர் விடயங்களை எடுத்துக் கூறுவதற்கு ஆங்கிலத்திலுள்ள சொற்களின் கருத்தினைப் போதுமான வகை

www.thamizham.net - Free E book No 7511

யிலே வெளியிடுவதற்கான போதிய அளவு சொற்கள் தமிழில் இல்லையெனச் சில பிராமணர்களாலும், தவருக வழி நடத்தப் பெற்ற தமிழ் மாணவர்களாலும் கூறப்படும் முறையீட்டின் வீண் தன்மையை எடுத்துக் காட்டுவதற்காகும் ! — 4

ஆங்கிலத்தால் வழக்கு நிலைப்படுத்தப்பட்ட தற்காலச் சிந்தனைகளின் பல்கிளைப்பட்ட நிலையை எடுத்துக் கூறுவதற்குத் தமிழ், சமஸ்கிருதத்தின் உதவியின்றி இயங்குமளவுக்குப் போதுமான வளங் கொண்டதன்று என்றும், அதுவும் ஆங்கிலமே உலகின் சகல பகுதியிலுள்ள பல்வேறு மொழிகளிலிருந்தும் தனக்குத் தேவையான சொற்களைத் தழுவியமைத்துக் கொள்வதை வெறுத்தொதுக்காத பொழுது, தமிழைத் தூயதாகவும் முழுமை சிதையாததாகவும் வைத்துக்கொள்வது போட்டியில் நல வாய்ப்பினை நோக்கும் கொள்கைக்கு எதிராக அமையுமென்ற உளுத்துப் போன வாதத்தை — — — 5

மேற்காட்டிய மேற்கோள் வரிகளால் மறைமலையடிகளாரின் முயற்சி பார்ப்பனர்களிடமிருந்து செந்தமிழ் காக்கும் முயற்சியே தவிர, தமிழர்களின் அரசியல், வாலாறு குமுகாய அமைப்பு, சாதிஅடிப் படை முதலியனவற்றுள் தலையிடுவதன்று என்பது தெரியுமே. சிவத்தம்பியின் முயற்சி வேறு.

தமிழின் தொன்மையை, அதன் உண்மையைப் பழந்தமிழர்தம் பண்பாட்டை நிறுவ 'வேளாளர் நாகரிகம்'(1961) என்று மறைமலை யடிகள் எழுதிய நூலை, அரசியலுக்கான அடுத்த சான்ருகக் காட்டு கிருர் ஆசிரியர். அதுவும் அடிபடுகிறது.

'பண்டைக் காலந்தொட்டு நம் செந்தமிழ் மக்களில் நாகரிகத் தாற் சிறந்து வாழ்ந்து தமிழ் மொழியையும் சிறு வழிபாட்டை யும் நிலை நிறுத்தி ஆரியரையுந்திருத்தி நல்வழிப்படுத்திஞேர் வேளாளரே என்பது எமது ஆராய்ச்சியில் நன்கு புலப்படாமை யால் — — — 6.

'ஆரியச்சேர்க்கை' தமிழர்க்கும், தமிழ்க்கும் ஆகாது'. என்ற அடிகளாரின் சொற்களைக் காட்டி ஆரிய எதிர்ப்புப் போராட்டத்தில் தனித் தமிழியக்கம் ஈடுபாடு கொண்டது — அரசியற் பின்னணியின் தொடக்கம் என்கிருர்.

திராவிடர்க் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் இரு கட்சி களின் கொள்கை கோட்பாடுகள் ஒரே நோக்கமாக இருந்தாலும் தந்தை பெரியார் வலியுறுத்தியபடி திராவிடர் கழகம் வெறும் குமுகாயக் கட்சியே. அறிஞர் அண்ணு தொடங்கியபடி திராவிட முன்னேற்றக்கழகம் அரசிற் கட்சியே என்பதை வேறு படுத்திப் புரிந்து கொள்ள வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7511

சிவத்தம்பி காட்டியதற்கு மாருக, தனித்தமிழியக்கம் வெறும் மொழி இயக்கமே.

மொழிவழித் தடைகளுக்கு விடை காணும் முயற்சியே ஆரிய எதிர்ப்பு.

'இராமலிங்க அடிகள் எவ்வளவு அழகாய்ப் பாடியிருக்கிருர். ஆனல், அப்பாட்டின் இரண்டாம் அடியிலுள்ள 'தேகம்' என்ற சமஸ் கிருதச் சொல்லை நீக்கி 'யாக்கை' என்ற தனித்தமிழ்ச் சொல்லை அங்கே அமைத்துப் பாடியிருந்தால் இன்னும் எவ்வளவு நன்ருயிருக்கும்' — 7

என்று அடிகளும் அவர் மகளும் உரையாடியதைத் தனித்தமிழியக்கத்தை மேற்கொள்வதற்கு (1916) காரணமாக இருந்தது என்பதை மறுத்து.

'ஆனல் 1916-இல் இவ்வியக்க நெறியை மேற்கொள்வதற்கு முன்னரே இவ்வியக்கத்தின் அச்சாணியான கருத்தினை மறைமலையடிகள் மேற்கொண்டிருந்தாரென்பது உள்ளிடையாகத் தெரிகின்றது' — 8

ஒரு கருத்தைச் சொல்லி விட்டு அதை நிறுவாமலேயே அடுத்துக் தொடர்கிற இவர் 'என்ன ஆராய்ச்சியாளரோ! என்ன ஆராய்ச்சியோ!

1916-க்கு முன்பே மறைமலையடிகள் பல நூல்களை வெளியிட்டிருப்பதாகக் குறிப்பிடுகிற ஆசிரியர், அவை தனித்தமிழில் வெளியிடப் பட்டனவா என்பதை வெள்ளிடையாகச் சொல்லாமல் உள்ளிடையாகத் தெரிகிறது என்றெல்லாம் கதைக்கிருர்.

தனித்தமிழியக்கத்தை அடிகளும் மகளும் மேற்கொள்வதற்குக் காரணமாக இருந்தது என்ற அளவில் இச் சம்பவம் சுவாரசியமானதாகவும், நாடக பாணி நெறிப்பட்டதாகவும் அமைகின்றது என்பது உண்மையே. — 9.

காந்தியார் சிறு அகவையில் அரிச்சந்திரன் நாடகம் பார்த்த பிறகு அடைந்த மன மாற்றத்தைச் சுவையான நாடகம் என்கிருரா ஆசிரியர் ?

1916-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் சென்னையில் கூடி, பார்ப்பனரல்லாதார் உரிமையைக் காக்கத் திட்ட மிட்டனர். 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' எனும் பெயரால் ஓர் அரசியல் கட்சி தோற்றுவிக்கப் பட்டது. —10

இவ்வாறு தோன்றிய இயக்கம் அது நடத்திய ஆங்கிலப் பத்திரிக்கையின் பெயராலேயே (Justice — ஜஸ்டிஸ்) பின்னர் அழைக்கப் பெற்றது. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் 'ஜஸ்டிஸ்' கட்சியாயிற்று. — 11

www.thamizham.net - Free E book No 7511

தனித்தமிழியக்கத்தின் முக்கிய அம்சமான பிராமண எதிர்ப்பு என்னும் கோட்பாடு எவ்வாறு ஓர் அரசியற் கட்சியாக முகிழ்த்தது. — 12

தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளே என்பதை ஒத்துக் கொள்கிற ஆசிரியர், மறைமலையடிகளாரின் முயற்சியிலோ, ஒத்துழைப்பிலோ, பின்னணியிலோ 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' தோற்றுவிக்கப் படவில்லை என்பதையும் ஒத்துக் கொள்வார் என்று நம்புகிறேன்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் நோக்கமாக, தூய தமிழில் பேசுவதும், எழுதுவதும் இருக்கவில்லை. நல உரிமைச் சங்கம் தொடங்கப் பட்டதும், தனித்தமிழியக்கத்தில் ஈடுபாடுடையவர்களால் அன்று.

> 'பார்ப்பனியத்திற்குப் பலியாகாதே! மதத்திலே அவன் தரகு வேண்டாம்! கல்வியில் அவன் போதனை வேண்டாம்! சமுதாயத்தில் அவர் உயர்வுக்கு உழைக்காதே! திராவிடா! விழி; எழு, நட; உன் நாட்டை உனதாக்கு, என்பதேயாகும் — 13.

என்று வயவர் தியாகராயர் வெளியிட்ட, மார்க்கசு வெளியிட்ட பொதுவுடைமைக் கூட்டறிக்கைக்கு ஈடான அறிக்கையே சான்று. தனித்தமிழியக்கச் சிந்தனைகள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்திற்கோ, இல்லை என்பது தெளிவாகிறது.

'தனித்தமிழியக்கத்தின் ஒரு முனைப் போராட்டம் ஆரிய எதிர்ப்பு. அதுவே தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் அடிப்படைப் போராட்டம். எனவே தனித்தமிழியக்கத்திற்கு அரசியற் பின்னணி உருவாகி விட்ட' தென்கிறார்.

முன் காட்டியபடி, வயவர் தியாகராயர் கருத்துப்படி, கல்வி, மத, குமுகாய, பார்ப்பன எதிர்ப்பு மட்டுமே தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் நோக்கம். தூய தமிழைப் பேணிக் காப்பதும் அதன் நோக்கமாக அறிக்கையில் கூறப்படவில்லை.

தமிழ் காக்கும் முயற்சியில், ஆரிய எதிர்ப்பென்பது தனித் தமிழியக்கத்தின் ஒரு கூறே.

எனவே பார்ப்பன எதிர்ப்பு என்ற தடத்தில் ஓர் அரசியல் கட்சி உருவாகியதாலேயே தனித்தமிழியக்கத்திற்கு அரசியற் பின்னணி உருவாகி விட்டது என்பதை ஒத்துக் கொள்ள இயலாது.

'பார்ப்பன எதிர்ப்பு என்னும் அடிப்படையான போலித் தன்மையை எடுத்துக் கூறுவது தேவையாகும். தமிழின் முக்கியத்துவத்தையும், அதன் புராதன புகழ் மீட்பையும் பிராமணரல்லாதார் மாத்திரமல்லாது, பிராமணர்களும் விரும்பினர். அந்நோக்குடன் செயற்பட்டனர். உ. வே. சாமிநாதையர் முதல் சுப்பிரமணிய

www.thamizham.net - Free E book No 7511

பாரதி வரை தமிழின் புகழ் மீட்பிற்குப் பெரிது உதவிய பிராமணர் பலருளர்' 14.

'தனித்தமிழியக்கத்தின் பார்ப்பன எதிர்ப்பு என்பதே போலியானது'. என்று சில பார்ப்பனர்களைச் சான்று காட்டித் தமது தனிக்கருத்தைத் திணிக்கிறார் ஆசிரியர்.

அறிஞர் அண்ணாவின் நடையிலே சொன்னால்,'சில அக்கிரகாரத்து அதிசய மனிதர்'களைச் சுட்டிக் காட்டி. பார்ப்பன எதிர்ப்பு தேவையற்றது என்கிறார்.

இஃது அயல் நாட்டிலிருந்து வந்து அயல் நாட்டிடமிருந்து இந்தியநாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட அன்னிபெசண்டைச் சுட்டிக் காட்டி நாட்டு விடுதலை உணர்ச்சியே போலியானது என்று கூறுவதற்கு ஒப்பாகும்.

சில பார்ப்பனர்களிடம் தமிழ்ப்பற்று இருந்தது என்பதாலேயே பார்ப்பன எதிர்ப்பு தேவையற்றது என்பதை நாம் ஏற்பதற்கில்லை. அதுவும் அவர்களிடம் வெறும் தமிழ்ப்பற்று இருந்ததே தவிரத் தனித் தமிழ்ப் பற்றன்று என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**தம்'ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்' என்னும் நூலில், உ. வே. சா. முதலாக, சி. சு. பாரதி ஈறுகக் கொண்டிருந்த நச்செண்ணங்களைப் புலப்படுத்தியிருக்கிறார்.

'நான் தனித்தமிழியக்கம் காண்பதற்கு முன்பே அவர் தனித் தமிழ் உணர்ச்சி கொண்டு தம் வடமொழிப் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக் கொண்டாரே என்று பரிதிமாற்கலைஞரைத் தம் வாழ்நாள் முழுதும் அடிகள் பாராட்டிக் கொண்டே இருந்தார்—15

'மறைமலையடிகள் பரிதிமாற்கலைஞரின் தனித்தமிழியக்க நடவடிக்கைகளைத் தமது தனித்தமிழியக்கநடவடிக்கைகளின் முன்னோடியாகக் கொள்ள வில்லை என்ற கருத்தினை நாம் விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும். பரிதி மாற்கலைஞரின் தனித்தமிழியக்கம் பிராமண எதிர்ப்பற்றது. அடிகளாரின் தனித்தமிழியக்கம் பிராமணரல்லாதோரின் விழிப் புணர்ச்சியின் ஓர் அங்கமாக அமைவதென்னும் உண்மை இங்கு முற்று முழுதாக நிருபணமாகின்றது — 16.

'வேதாசலம், மறைமலையடிகளாக மாறுவதற்கு முன்பே சூரிய நாராயண சாஸ்திரி, பரிதிமாற் கலைஞராக மாறி விட்டார். என்பது உண்மைதான் வெறுந் தனித்தமிழ்ப் பெயர் மாற்றம் மட்டுமே தனித் தமிழியக்கத்தின் தோற்றமாகி விடாது; தொடக்கமாகி விடாது. பாஷை என்பதை 'மொழி' என்று பெயர்க்காமல் 'பாடை' என்றே பெயர்த்தவர் பரிதிமாற் கலைஞர்.

ஆசிரியர் காட்டாமல் விட்டு விட்டாரே ! ஜோசப் கான்ஸ்டண்ட் பெஸ்கி' என்ற பெயரில் கிறித்தவ மதப்பணிக்காகப் புறப்பட்டுத்

www.thamizham.net - Free E book No 7511

தமிழகத்திற்கு வந்து 'தைரிய நாதர்' என்ற தமிழ்ப் பெயராகவும், பின்பு' வீரமாமுனிவர்' என்று தனித்தமிழ் பெயராகவும் மாற்றிக் கொண்டாரே வீரமாமுனிவர்.

அதனால் பரிதிமாற் கலைஞருக்கு முன்பே தனித்தமிழியக்கம் தொடங்கப் பட்டு விட்டது என்று ஆசிரியர் ஒத்துக் கொள்வாரா? வீரமாமுனிவரைப் பரிதிமாற் கலைஞர் பாராட்ட வில்லை. பரிதிமாற் கலைஞரை மறைமலையடிகள் பாராட்ட வில்லை என்றெல்லாம் தனித் தமிழ் இயக்கத்தில் முரண்பாடுகள் காண முயல்வது முறையற்ற முடிவுகளாகும்.

பார்ப்பன எதிர்ப்பு, பரிதிமாற் கலைஞரிடத்தில் இல்லை என்கிறார் ஆசிரியர். பார்ப்பனரே, பார்ப்பன எதிர்ப்பியக்கம் காண்பார் என்று எப்படித்தான் எதிர்பார்க்கிறாரோ ஆசிரியர்!

'ஒரு தடவை கூட ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டத்திலோ விழாவிலோ கலந்து கொண்டதில்லை என்றும் அதற்குக் காரணம் கலைத்துறையில் பணியாற்றும் புலவன் அரசியல் துறைகளில் ஈடுபடலாகாது' — 17

'ஆனால் இந்தக் கோட் பாட்டை அடிகள் எல்லா வேளைகளிலும் போற்ற வில்லை என்பதும் தெரிகின்றது. 1929-இல் திருப்பாதிரிப் புலியூரில் நடந்த சைவ மகா நாட்டில் காந்தியின் கதரியக்கத்தை அடிகள் நேரடியாகக் கண்டித்தார். அன்றியும் இரண்டாவது உலகப் போரின் போது அடிகள் அக்கால வெள்ளை கவர்னர் விரும்பியாங்கே சென்று சென்னை நகர மண்டலத்தில் கூட்டப்பட்ட 'பிரிட்டிசார் வெற்றி பெற வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுங் கூட்டத்தில் 'அவ்விறைஞ்சுதலை மிக உருக்கத்துடன் ஆங்கிலத்தில் செய்தனர்'. — 18

ஆசிரியர் காட்டியிருக்கிற முதற் சான்றே, அவர் நூற்கருத்துக்கு முரணாக நமக்கு அரணாகத் 'தனித்தமிழியக்கத்திற்கு அரசியல் பின்னணி அறவே இல்லை' என்று அடித்துச் சொல்கிறது.

ஆசிரியர் காட்டியிருக்கிற அடுத்த சான்றிலிருந்து, இரண்டு நேரத்திலும் மறைமலையடிகள் இறை வழிபாட்டுக் கூட்டத்தில் மட்டுமே கலந்து கொண்டிருக்கிறார் என்பது ஆசிரியரும் ஒத்துக் கொள்கிற உண்மை.

1929-இல் திருப்பாதிரிப் புலியூரில் நடந்த மாநாட்டில் கதரை எதிர்த்துக் கூறியது அரசியல் ஈடுபாட்டால் அன்று அடிகள் காட்டிய தொழிற்கொள்கை எதிர்ப்பே அது.

சென்னை நகர மன்றத்தில் நடந்த கூட்டத்தில் ஆளுநர் விரும்பியபடி மறைமலையடிகள் கலந்து கொண்டு வெள்ளையரின் வெற்றிக்கு வழிபாடு செய்தது, காந்தியார் உட்பட ஒவ்வொருவர் இந்தி

www.thamizham.net - Free E book No 7511

யனும் அப்போது ஒத்துக் கொண்ட மனநிலை வழிபாடே. அது அந்தக் கால நாட்டுச் சூழ்நிலையே தவிர அரசியல் அன்று.

'அரசியல் துறையில் அடிகள் போக்குவேறு, அடியேன் போக்கு வேறு. இரண்டுக்குஞ் சந்திப்புண்டாதல் அரிது. அடிகள் எழுத்தில் ஆரியர் தமிழர் என்ற பிரிவை வளர்க்குங் கருவிகள் இருக்கின்றன.
— 19

திரு வி க. தேசியக் கட்சியில் இருந்தவர். ஆனால் மறைமலையடிகள் நயன்மை நீதி)க் கட்சியில் இருந்தவரல்லர். எனவே தான் அரசியல் போக்கு வேறுபட்டது, என்று கூறினாரே தவிர அரசியல் கட்சி வேறுபட்டது என்று திரு வி. க. கூறவில்லை.

கிறித்தவர்கள், தங்கள் தாய்மொழியாக ஆங்கிலத்தையும், இசுலாமியர்கள் அரபுவையும் கருதுவது போலப் பார்ப்பனர்கள் சமற்கிருதத்தைத் தங்கள் தாய்மொழியாகக் கருதுகிறார்கள். சமற்கிருதக் கலப்பைக் கண்டிக்கும் போது குறுக்கீடு செய்த ஆரியர்களைக் கண்டிப்பது தேவையாகி விட்டது. இதுதான் மறைமலையடிகளின் கருத்து.

எனவே திரு. வி. க. குறிப்பிட்டிருக்கிறபடி, மறைமலையடிகளிடமிருந்தது கருத்து வேறுபாடே தவிர வேறன்று.

'அடுத்து ஆசிரியர் காட்டும் செய்திகள், தேசிய இயக்கத்தைச் சார்ந்தவர்களின் தனித்தமிழீடுபாடு. சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவா, திரு. வி. க. இவர்களைக் காட்டுகிறார்.

தேசிய இயக்கத்தைச் சார்ந்தவர்களின் தனித்தமிழீடுபாட்டை நான் மறுக்கவில்லை. தனித்தமிழியக்கத்தில் தேசிய இயக்கங்களின் பங்கு என்ற அளவில் தொகுக்கப்பட்டிருந்தால் நூல் தலைப்பிற்குச் செய்திகள் பொருத்தமாயிருக்கும். ஆசிரியரைப் பற்றி நமக்கு வருத்தம் ஏற்பட்டிருக்காது.

அதிலும் ஆசிரியர் முழுமையாகச் செய்திகளைத் தொகுப்பதில்லை என்பதை வீரமாமுனிவரை விட்டதிலிருந்து தொட்டுக் காட்டினோம். இதுபோலவே தொடர்ந்து சுப்பிரமணிய சிவா தனித்தமிழ்க் கட்டுரைககு வேண்டுகோள் விட்டதை மட்டும் குறித்துத் 'தனித்தமிழ்க் கொள்கை வரலாறு' (த. ச. தமிழன்) எனும் கட்டுரையில் எடுத்துக் காட்டியபடி வ. வே. சு. ஐயர் தமிழ் எண்களைப் பயன்படுத்தி வலியுறுத்தியதைச் சுட்டிக் காட்டவில்லை.

'ஆசிரியர் காட்டியிருக்கிற அடுத்த கருத்து தனித்தமிழ் இயக்கத்தில் ஈடுபாடுள்ளவர்களிடையே இருந்த முரண்பாடு. எங்கே இல்லை முரண்பாடு? அரசியலியக்கத் தலைவர்களிடையே இல்லையா? மதவியலார்களிடத்திலே இல்லையா? எனவே மொழி இயக்கத்தில சில கருத்து முரண்பாடுகள் இருந்ததில வியப்பில்லை.

www.thamizham.net - Free E book No 7511

பாவாணர் சாதிப்பெயர் தூயதமிழில் இருந்தால் பயன்படுத்தும் இயல்புடையார். ஆனால் பாவலரேறு அதையும் பயன்படுத்த மறுப்பவர்.

'மறைமலையடிகள் பயன்படுத்திய சொற்கள் யாவும் தனித்தமிழ்ச் சொற்கள் என்று கூறிவிட முடியாது. உதாரணமாக அவர் கையாண்டுள்ள 'மனம், ஆசிரியர், தெய்வமாட்சி, மது, உருவம்' போன்ற சொற்களைத் தமிழ்ச் சொற்களென நிறுவுதல் கடினமாகும்—20.

மன் + அம் — மனம்

ஆசு + இரியர் — குற்றம் நீக்குபவர் (அல்) நீங்கியவர்

தெய்வம் + மாட்சி— [தீ — தேய் — தெய்] இதன் விரிவைப் பாவாணர் பெயராய்வில் காண்க. (திங்களிதழ்-தென்மொழித் தொகுப்பு)

மது — பாவாணரின் வடமொழி வரலாற்றில் 572 ஆம் சொல்லாகத் தமிழ்ச் சொல்லென்று நிறுவப்பட்டுள்ளது.

உரு + அம் — உருவம்.

எனவே இவையெல்லாம் தனித்தமிழ்ச் சொற்களே என்பது தனித்தமிழியக்கத்தின் தானைத் தலைவர். ஞா. தேவநேயப் பாவாணர் காட்டிய உரைகல். ஆசிரியர் எடுத்துக் காட்டியிருக்கிற மறைமலையடிகள் பயன்படுத்திய சொற்கள் யாவும் தனித்தமிழ்ச் சொற்களே.

தனித்தமிழ்ச் சொற்களிலேயே இவ்வளவு தடுமாற்றம் இருக்கிற ஆசிரியரின் ஆய்வை நாம் ஐயப்பட வேண்டியிருக்கிறது.

சீவக சிந்தாமணிக்கு உரைதீட்ட நச்சினார்க்கினியர் சமண சமயத்தில் சிலகாலம் வாழ்ந்தார் என்ற செவிவழிச் செய்தி போலச் சிவத்தம்பியும் செந்தமிழ் வளர்க்கும் தனித்தமிழியக்கத்தில் தஞ்சம் புகுவது தகும் என்று கருதுகிறேன்.

இது காறும் எடுத்து வைத்த — தொகுத்து வைத்த கருத்துகளால் தனித்தமிழியக்கத்திற்கு, அரசியற் பின்னணி அறவே இல்லை என்பது தெளிவாகிறது.

சான்றுகள்

எண்	நூல்	பக்கம்
1.	தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி	— 2
2.	மறைமலையடிகளார் கடிதங்கள்	— 52-58
3.	தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி	— 9

4—20. பக் : 6, 7, 9, 3-4, 4-5, 4, 20, 21, 21, 20-21, 24, 42, 42, 45, 45, 45-46, 59.

www.thamizham.net - Free E book No 7511

சிலம்பிற் பிழையா?

— புலவர். இறைக்குருவனார்

[சிலப்பதிகாரத்தில் பிழை இருப்பதாக முதன்முதலிற் கண்டறிந்து கூறியவர் (1957) பூதலப்பட்டுச் சீராமலு அவர்களே என்றும், தாம் அதனை, பர். ம. பொ. சி அவர்கட்கு எடுத்து விளக்கியதாகவும்,(8-9-60)அவரும் அதனை ஒருவாறு ஒப்புக்கொண்டதாகவும், 'கொலைக்களத்தில் கண்ணகி' என்னுங் கட்டுரையில் (5-6-60) அவர் எழுதிய கருத்தையும் பின்னர் மாற்றிக்கொண்டதோடு ஈராண்டு கழித்து அப்'பிழை'யை அவரே கண்டு காட்டுவார் போல் 'இளங்கோவின் மறதி' என்னுங் கட்டுரையை (14-1-62) வெளியிட்டதாகவும் 'சிலம்பிற் சிறுபிழை' என்னும் நூலெழுதிய மு. கு. சகநாதனார் என்பவர் அந் நூலில் (1968) பெயர் இடங் காலஞ் சுட்டி விளக்கமாக எழுதியிருப்பதனை வாய்மையாகக் கொண்டு அதனை இக் கட்டுரையின் முதற்றொடரில் சற்று அழுத்தங் கொடுத்துக் குறிப்பிட்டிருந்தேம்.

ம. பொ. சி. அவர்களின் கட்டுரைக்கு முன்னமேயே பர். வ. சுப. மாணிக்கம் அவர்கள் இச் சிக்கலைச் சுட்டிக்காட்டி நாடக அறம் எனப் புதியதொன்று கூறியுள்ளமையால் (1958) ம. பொ. சி. அதனையே வழிமொழிந்து, தம் சான்றுகளால் வலுப்படுத்தி 'நாடக அறம்' அன்று; 'இளங்கோவின் மறதியே' என்று நாட்டியிருக்கலாம் ஆயினும், அவர் தமது ஆராய்ச்சியையே முதன்மைப் படுத்தி உரைத்து அதன் ஈற்றில் தமது கூற்றுக்கு வ. சுப. மாணிக்கம் ஆதரவாக நிற்பதாகவும், ஆயின் அறமென்றல் அமையாதென்றும், மறதி என்றலே பொருந்தும் என்றும் கூறியிருப்பது மிகத் தந்திரமான கூற்று என்று கருதுவதற்கு இடமாயிருத்தலும், ம. பொ. சி. 'சிறுபிழையாளர்' கூற்றுப்பற்றி 'மறதி'யைத் தாங்கி நிற்கும் தம் 'சிலப்பதிகாரத் திறனாய்வு' நூலில் (1974) ஏதும் குறிப்பிடாமையும் யாம் மேற்கண்டவாறு கூறுதற்குத் துணைக் கரணியங்களாயின.

இக் கட்டுரைத் தொடரைப் படித்த (தென்மொழி சுவடி 15; ஓலை 6, 7, 9) ம. பொ. சி. அவர்கள், தென்மொழியின் புரப்பாசிரியர் மறை நித்தலின்பனார் அவர்களை நேரிற் கண்ட காலை இது பற்றிக் குறிப்பிட்டுப் 'பிழை'முடிபைத் தாமே கண்டு பிடித்து மறதி'யாக எழுதியதன்றி வேறில்லை என்று உறுதியாகக் கூறியுள்ளார். அஃது உண்மையாயின் எமது கூற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டுகின்றேம்.]

தெ. பொ. மீ. யின் தவறான ஏடல்

'வண்டார் இருங்குஞ்சி' என்னும் பாடலை ஆசிரியர் கூற்றாகக் கொண்டு ஆராயும் நோக்கில் அது பிழையாகவே முடிகிறது என்று

www.thamizham.net - Free E book No 7511

டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் முடித்துக் கூறுகிறார். கூறி, அதற்கு மாற்று உரைப்பார் போல், வ. சுப. மாணிக்கம் அவர்கள் 'நாடக அறம்' என்றதனைப் பற்றிக்கொண்டு, 'அவ்வாறாயின் அப்பாடலை நாடக மாந்தர் கூற்றாகக் கொண்டு ஆராய வேண்டும்' என ஏடலுரைக்கின்றார்.* ஆகவே அதனையும் ஆராய்ந்து முடிபு செய்துகொள்ளல் நன்று.

வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேல்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்

என்னும் பாடலில் கண்ணகி, கோவலன் தன்னைப் பிரியுங்கால் அவனைத் தழுவி அவன் தலைமாலையைத் தன் கூந்தலிற் சூடிக் கொண்ட காலை நிகழ்ச்சியும், வெட்டுண்ட புண்ணினின்றும் அரத்தம் கொப்புளிக்கக் கிடந்த கோவலன், தன்னைக் காணமாட்டாமையாகிய பெருந்துன்பத்தைக் கண்ணகி கண்ட மாலை நிகழ்ச்சியும் குறிப்பிடப் படுகின்றன.

ஈண்டுக் 'கொண்டாள் தழீஇ'-தழுவி (மாலையை)க் கொண்டாள் என்று ஆசிரியர் கூறுகின்றார். அவர்கள் பிரிந்தமையைக் கூறும் கொலைக்களக் காதையிலும் தலைமாலையை அவள் கூந்தலிற் கொண்ட தனைக் கூறாவிடினும் அவனும் அவளைத் தழுவினான் என்பதை 'ஒருங்குடன தழீஇ'¶ என்று குறிப்பிடுகின்றார். கண்ணகி கோவலன் தலைமாலையைக் கொண்டது அப் பொழுதிலேயே என்பதும், தழுவிக் கொண்ட அந் நிலையில் அவர்கள் தமித்திருந்த தன்றி ஆண்டு யாரும் இலர் என்பதும் உய்த்துணரப்படும். அன்றியும் கோவலன் ஒருங்குடன் தழுவியமையைத் தொடர்ந்தே 'உழையோர் இல்லா ஒருதனிக் கண்டு'|| என ஆசிரியர் கூறுகினறமையும் இதனை உறுதிப்படுத்தும்.

மாலையில் கோவலன் உடலைக் கண்டு அழுதரற்றும் கண்ணகி

"யாருமில் மருள்மாலை இடருறு தமியேன்முன்"§

என்று குறிப்பிடுதலால் அந் நிலையில் அவள் தனித்தே இருந்தாள் என்பது வெளிப்படை. அற்றேல்

"கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்ட" >

---

* சிலப்பிற் சிறப்பிழை - அணிந்துரை பக் 2.
¶ சிலப்-கொலைக்களக் காதை 95.
|| ,, ,, ,, 95-96.
§ ,, ஊர்சூழ் வரி 43
> ,, ,, ,, 29

என்றது என்னையெனின் அவர்கள் தெலைவிலிருந்தே சுட்டிக் காட்டினர் என்பதே இடம் நோக்கி இயைபுறக் கொள்ளப்படும்.

ஆகவே, மேற்படி பாடலில் குறிப்பிடப்படும் காலை, மாலை நிகழ்ச்சிகளை யாரும் கண்டிலர் என்பது ஐயுறவுக் கிடனின்றித் தெளியக் கிடத்தலால் அப் பாடலைத் தெ. பொ. மீ. கூறுமாறுபோல் நாடகமாந்தர் கூற்றாகக் கொள்ளுதற்கு ஒரு சிறிதும் வாய்ப்பில்லை என்பதும், யாரும் காணா அக் காட்சிகளைக் கூறுந் தகுதி நூலாசிரியர்க்கே உரியதாகலின் அஃது ஆசிரியர் கூற்றேயாம் என்பதும் ஒருதலை. வ. சுப. மாணிக்கம் கூறியாங்கு நாடக அறமென வழுவமைதி காட்டுதற்கும் இடமின்மை யறிக!

அப் பாடல் ஆசிரியர் கூற்றென்பது உறுதிப்படுதலின் 'பிழை முடிபு' தெ. பொ. மீ. க்கும் உடன்பாடேயாம் என்பதூஉங் கொள்ளப் படும். இது நிற்க!

அடிப்படைக் கரணியம்

மேற் கூறியாங்குப் பற்பலரும் கொண்ட 'பிழை முடிபு'க்கு அடிப்படைக் கரணியம் கோவலன் கொலைப்பட்டதும், குரவைக் கூத்து நடைபெற்றதும் ஒரு நாளில் நடந்தன அல்லவென்றும், அவை முதனாளும் மறுநாளுமாகிய இருநாள் நிகழ்ச்சிகளாம் என்றும் கொள்கின்றமையே யாகும். இது பற்றி வ. சுப. மாணிக்கம் அவர் -கள் கூறுவது வருமாறு:

> "கோவலன் கண்ணகியைப் பிரிந்து அந் நாள் மாலையே கொலையுண்டான் என்று வைத்துக் கொள்வோம். "நெய்ம் முறை நமக்கு இன்று ஆம்" என்று மாதரி தயிர்கடையச் செல்லுகின்றாள். பாலுறையாமை பார்க்கின்றாள். எனவே இது மறுநாட் காலையாகும். பின்னர்க் குரவை நடைபெறு கின்றது. அதனைக் கண்ணகி கண்டு களிக்கின்றாள். குரவை முடிவில் ஊர்ப் பேச்சை ஒருத்தி வந்து கண்ணகிக்குத் தெரி விக்கின்றாள். இதனால் முதல் நாள் கோவலன் இறந்தான் மறுநாள் மாலை கண்ணகி அத் துயரச் செய்தியை அறிந்தனள் என்பது தெளிவு" *

இதனையே சிவஞானமும், சிறுபிழையாளரும் வலியுறுத்துகின் றனர்.

காதை அமைப்பு முறையில் கொலைக்களக் காதையும் ஆய்ச்சியர் குரவையும் முன்னும் பின்னுமாய் அடுத்த அடுத்த காதைகளாக அமைக்கப்பட்டுள்ளமையால் கதை நிகழ்ச்சி முறையிலும் கொலைக் களக் காதை நிகழ்ச்சிகட்குப் பின்னரே ஆய்ச்சியர் குரவை தொடங்கு

---

* இரட்டைக் காப்பியங்கள் முன்னுரை.

www.thamizham.net - Free E book No 7511

கின்றது என்றே மேற்கூறிய சீராமலு முதல் தெ. பொ. மீ. ஈறான அனைவரும் கருதுகின்றனர்.

இளங்கோவடிகளின் இலக்கிய உத்தி

இளங்கோவடிகளார் கதை நிகழ்ச்சிகளை ஆற்றொழுக்காக நிரல் படுத்துரையாது நாடகப் பாங்கு நண்கணம் சிறப்பச் சிற்சில இடங் களில் முன்னை நிகழ்ச்சிகளைப் பின்னர்ப் புலப்படுத்தும் (Flash back) இலக்கிய உத்தியைத் திறம்படக் கையாளுகின்றார்.

மாதவியினிடத்தே கோவலற்குப் பிறந்த மகளான மணிமேகலை யைப் பற்றி முன்னம் ஏதுமே கூறாது விட்டு, அவன் கொலைக்களப் படுதற்கு முற்பட்ட அடைக்கலக் காதையில் மாடலன் வாய்வழி வெளிப் படுத்துதலும், அவன்றன் பெருவீரத்தையும் அருள் நெஞ்சத் தையும் கொடைத் திறத்தையும் வெளிப்படுத்துவனவான கடக்களிறு அடக்கியது முதலான முன்னை நிகழ்ச்சிகளையும் அடைக்கலக் காதை யிலேயே அம் மாடலன் வாய்வழியே வெளிப்படுத்துதலும், கோவலன் புறஞ்சேரிப் பொழிலில் புலரிப் பொழுதில் கண்ட கனவை, மனத் தகத்துக் கரந்து பிற்றை நாள் சாயுங்காலத்தே அவன் மாடலற்குக் கூறுமுகமாக வெளிப்படுத்துதலும், கடிமனைக்கண் கண்ணகியை விட்டுப் பிரியுங் காலத்தே அவள் அவனைத் தழுவி அவன் தலைமாலை யைத் தன் கூந்தலிற் சூடிக்கொண்டமையை ஆண்டுக் கூறாது கொலைக்களத்தே வெட்டுண்டு கிடந்த அவனைக் கட்டியழுங் காலத்தே (ஊர்சூழ்வரியில்) கூறுதலும், மதுரை தீப்பட்ட அற்றை நள்ளிரவே மாதரியம்மை தீப் பாய்ந்தமையை ஆங்குக் கூறாது (வஞ்சிக் காண் டத்து) நீர்ப்படைக் காதையிற் கூறலும் இன்னோன்ன பிறவும் கண்டு கொள்க!

இணைப்பும் பிணைப்பும்

கண்ணகி கோவலரை மாதரியம்மை கடிமனைப் படுத்தியமை கூறிக் கொலைக்களக் காதையைத் தொடங்கிய ஆசிரியர் அடிசிலாக் குதற்கு வேண்டுவன தருமாறு மாதரி ஆய்ச்சியர்க்குக் கூறியதும் பிறவுமான அம் முன்னிரவு நிகழ்ச்சிகளையே. பின்னுந் தொடர்ந்து, மற்றை நாட் காலையிற் கடிமனையிற் கண்ணகி சமைத்துப் படைத் ததும், கோவலன் உண்டு பிரிந்ததும் ஆகியவற்றைக் கூறிக் கோவ லனைப் பின் தொடர்ந்து, அவன் பொற்கொல்லனைக் கண்டதும், பொற்கொல்லன் கோவலனை இருத்தி அரண்மனைக்குச் சென்றதும் கூறி, அரசன் ஆடல் கண்டதும், அரசி ஊடல் கொண்டதும் பொற் கொல்லன் அரசன்பால் பொய்மை விண்டதும், அரசன் உத்திரவு பெற்று வந்த ஊர்காப்பாளருள் ஒருவன் கோவலன்மேல் கொலைவாள் ஓச்சியதும் ஆகிய நிகழ்ச்சிகளை மிகச் செப்பமாகச் சுவைகுன்றாது தொடர்ந்து கூறி அக் காதையை அதன் பெயருக்கேற்ப நிறைவு செய்தார்.

www.thamizham.net - Free E book No 7511

அடுத்து ஆயர்சேரியின் அற்றை நாள் (வியாழன்) நிகழ்ச்சிகளையே கூறத் தொடங்கிக் காலைப் பொழுதில் மாதரியம்மை தயிர் கடையச் சென்றதும், தீக்குறி கண்டதும், மகள் ஐயையை நோக்கிக் கண்ணகியுங் காணக் குரவை யாடுவோம் என்றதும், பின் குரவை ஆடியதும், மாயனை நோக்கி வேண்டியதுங் கூறி அக் காதையையும் அடிகள் நிறைவு செய்தார்.

தொடர்ந்து துன்பமாலையுள் குரவைக் கூத்தின் இறுதியில் ஆய்மகள் ஒருத்தியின் வாய் மொழியாகக் கொலைக்கள நிகழ்ச்சியைப் பிணைத்துப் பின்னர்த் துன்பமாலையையும் ஊர் சூழ் வரியையும் அடுத்தடுத்து இணைத்து அடிகள் கதையைச் செவ்வியின் நடத்திச் செல்லும் திறம் நனிமிக வியத்தற் பாலதொன்றும்.

அடைக்கலம் புக்க மறுநாள் (வியாழன்) காலையில் கடிமனையில் தொடங்கிக் கொலைக்களம் வரையில் அற்றை நிகழ்ச்சிகள் கோவலனையே பின்தொடர்கின்றன. கொலைக்களக் காதை கடிமனையும், வழிநிலையும், அரண்மனையும், கொலைக்களமும் என்னும் நான்கு நிகழிடங்களைக் கொண்டுள்ளமையும் அவை நான்கும் கோவலனையே நடுவாகக் கொண்டு நடைபெறுகின்றமையும் அவற்றுள் அரண்மனை நிகழ்ச்சி சற்றே விலகி நிற்பினும் அது முற்றும் வேறுபட்டு நில்லாமையும் நுணித்துணர்ந்து கொள்க!

அற்றை நாளில் ஆயர்சேரியில் நிகழ்ந்த மற்றை நிகழ்ச்சிகளை ஆசிரியர் அக் காதையில் இடைநுழைத்திலர். அவ்வாறன்றி அக் காதையிலேயே நுழைக்கப் புகுந்து ஆய்ச்சியர் குரவை நிகழ்ச்சிகளையும் கூறியிருப்பின் கதைப் போக்கு பலதலையான் சுழன்று ஆசிரியன் நோக்கத்தைக் கெடுத்திருக்கும்; விறுவிறுப்புத் தளர்ந்து சுவை குன்றிப் போயிருக்கும் என்பது ஒருதலை.

இவற்றையெல்லாம் நுண்ணிதின் உணர்ந்தே அடிகள் ஆய்ச்சியர் குரவையைக், கொலைக்களக் காதையை அடுத்து வைப்பாராயினர். அன்றியும் முன்னை வேட்டுவவரி போலவும், பின்னைக் குன்றக் குரவை போலவும் ஆய்ச்சியர் குரவையைத் தனியொரு காதையாக இனிதமைக்கவும் வாய்ப்பாயிற்று.

கொலைக்களக் காதையும், ஆய்ச்சியர் குரவையும் அடுத்தடுத்துத் தனித்தனி நிற்பினும், நிகழ்ச்சி வகையாற் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்பதையும், முற்பகுதி யொழிந்த கொலைக்களக் காதையும், ஆய்ச்சியர் குரவையும், மற்றுத் துன்பமாலை, ஊர்சூழ்வரி ஆகியனவும் ஒரே நாளில் நடந்த நிகழ்ச்சிகளாம் என்பதையும் நுணித்துணர மாட்டாதார் தத்தம் மனத்தனவும் வாய்தந்தனவுங் கூறி வழுப்படுகின்றனர்.

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7511

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற கருத்துரைகளை வரவேற்று ஆதரவு தெரிவித்துள்ளார். 1973-இல் ஆனந்தபூரில் அகாலி தல மாநாட்டில் அதன் செயற் குழு மாநிலத் தன்னுடைமை (S tae Autonomy), மிகவும் வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியது. இத் தீர்மானப்படி பஞ்சாப் மாநிலத்திற்குப பாதுகாப்பு வெளிநாட்டுறவு, பணம், புகைவண்டி, அஞ்சல், தொலைவரி, ஆகிய துறைகள் நீங்கலாக ஏனைய துறை களில் முழு அரசியல், பொருளியல் உரிமையும் அத்துறைகள் தொடர்பாகப் பஞ்சாப் மாநிலம் தனது சொந்த அரசியல் அமைப்பை (Constitution) உருவாக்கி வரையறுக்க உரிமையும் கேட்கப்பட்டன. சாண்டிகார் மாநாட்டுக்குப் பின் புதுதில்லியில் குறுகிய காலம் தங்கிய திரு. தில்லான் தாம் கேட்டதெல்லாம் பஞ்சாப் மாநிலம் நடுவண் அரசின (Central Government of India) குறுக்கீடு ஏதும் இன்றி வெளி நாடுகளுடன் வணிக உறவுகளை வைத்துக் கொள்ள உதவும் தன்னுட்சியே என்று தெளிவு படுத்தியுள்ளார். அகாலி தலக் கட்சியின் இரு பிரிவுகளும் மீண்டும் ஆனந்தபூர் தீர் மானத்தை வலியுறுத்தத் தொடங்கியுள்ளன. பெரும்பான்மைப் பிரிவு இத்தீர்மானத்தை இந்திய நடுவண் அரசுடன் பேசித் தீர்க்கப் பட வேண்டிய ஒரு பெரும சிக்கலாகக் கருதுகின்றது. சிறுபான்மைப் பிரிவு தனது அரசியல் கொள்கையின் தலையாய நிலையாகவே தன்னுட்சித் தீர்மானத்தை எடுத்துக் கொண்டுள்ளது. (தொடரும்)

சிறப்புச் செய்தி:

மனு நூல் எரிப்புப் போராட்டம்!

கடந்த 17-5-81-ஆம் நாள் திராவிடர் கழகம் நடத்திய மனுநூல் எரிப்புப் போராட்டத்தில், தென்மொழி இயக்கச்சார்பில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார், புலவர்இறைக்குருவனார், பாவலர் குமரநடவரச ஈவப்பனார், பாவை. நடவரசன், பாவலர் தமிழ்க் குமரன், க. கண்ணன். அறி. இ.** ஆகியோர் ஈரோட்டில் கலந்து கொண்டு, தளைபட்டு 30-5-81 வரை கோவை நடுவண் சிறையில் வைக்கப் பெற்றுப் பின், தலைமைக்கழகத் தீர்மானப்படி பிணையலில் வெளிவந்தனர் அவர்கள் அனைவர் மேலும் இ பி. கோ. 143, 341 பிரிவுகளின்படி வழக்கு தொடர்ந்து நடந்து வருகிறது.

o மற்றும், தென்மொழிச் சார்பில், சென்னை, தியாகராயநகர் போராட்டத்தில் கலந்து கொண்ட **தென்மொழி மறைநித்தலின்பனார்** 17-5-81 ஒரு நாள் தளைப்பட்டு அன்று மாலை விடுவிக்கப் பெற்றார்.

o ஆசிரியர் கோவையில் சிறையிலிருந்த பொழுது, தென்மொழி அச்சகத்தில் 750 உருபா மதிப்புள்ள அச்செழுத்துகள் திருட்டுப்போனது குறிப்பிடத்தக்கது. — **அமைச்சர்.**

www.thamizham.net - Free E book No 7511

விருந்து நாம் தப்பிக் கொள்ளும் வழிகள் யாவை? இவற்றை ஓரள வேனும் அறிவுறுத்துகின்ற பெருமக்கள் எங்கெங்கே எந்தெந்த நாட்டத்திலோ இருக்கின்றனர். முழுமையாக அறிவுறுத்தி வந்த தமிழ்ப்பெருந்தகைகள் மறைந்து கொண்டே வருகின்றனர். காலாண்டுக் காலத்திற்குள்ளாக மொழிஞாயிறு பாவாணரையும் உரைவேந்தர் ஔவை அவர்களையும் அழகரடிகளையும் நாம் இழந் தோம். இப்பொழுது சின்னாட்களுக்கு முன்னர்ப் பண் ஆராய்ச்சி வல்லுநர், ஏழிசைத் தலைமகன் குடந்தை ப. சுந்தரேசனாரையும் தமிழகம் இழந்து விட்டது.

'தமிழில் பண் அமைப்பு முறைகளும் ஏன் தமிழில் இசையே இல்லை' என்று அரை நூற்றாண்டுக்கு முன்னர்வரை சொல்லி, எழுதி வந்த தமிழ்ப் பகைவர்தம் துடுக்கை அடக்கி வந்த தமிழிசை வேந்தர் இன்று நம்மிடையே இல்லை. இதற்கெல்லாம் நாம் என்செயப் போகின்றோம்? முயற்சியுடன் ஆவனசெய்வோம். அவர் இசைத் தமிழ்ப் பணியைத் தக்க முறையில் தொடர் வோம்.

— புலவர். நா. தண்டபாணி, க.இ; க.இல. அம்பல்; தஞ்சை மா.வ.

0 ; 851 : பேரன்பு கெழுமிய ஐயா அவர்கட்கு, வணக்கம். நலம். நலமறிய ஆவல், தங்கள் விடுதலை குறித்து மகிழ்கிறேன். தங்கள் வீரவரலாறு பெருமிதத்திற்குப் புத்திலக்கியம் வகுக்கிறது. தமிழர் இன்னமும் 'மனு' நெறி மடமையில் சிக்கிக் கிடக்கும் இழி தலைமை என்று ஒழியுமோ அறிகிலேன்.

தமிழரின் ஆகூழின்மையோ யாதோ, பண்ணாராய்ச்சிப் பேர றிஞர் குடந்தை ப. சுந்தரேசனார் பயனுள்ள தமிழிசை ஆய்வுகளில் மூழ்கியிருந்த காலைஇயற்கை யெய்தியமை எத்துணை அவலஞ்சேர்க் கிறது! இனியகுரலும் இசைப்புலமையும் தமிழறிவும் தமிழ்ப்பற்றும் வாய்ந்த அவரது மறைவு தமிழிசையுலகுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். தமிழிசைத் துறையில் தமிழின எழுச்சியுடையார் மிகச் சிலரே இருந்தனர். அவருள் முதல்வராகத் திகழ்ந்தவர் சுந்தரேசனார். அன்னார் விட்ட பணி தொடர்ந்து நிகழத் தமிழிசைஞர் முயல்வாராக. என் ஆழ்ந்த இரங்கலை யாவர்க்கும் உணர்த்துகிறேன்.

— தி. நா. அறிவுஒளி, திருக்கழுக்குன்றம்.

0 : 852 : பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம் தென்மொழி மேழ மாத இதழில் வெளியான நண்பர் திரு. சுடர்வேந்தன் மடலில் உள்ள செய்திக்கு ஒரு விளக்கம்! அன்றைய கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபொழுது குறுக்கிட்டவர் பார்ப்பனர் அல்லர். மது மயக்கத்திற் காட்பட்ட நம்மவர் ஒருவரே.

வெளியேறிய பின் தெருவில் குழப்பம் விளைவிக்க முயன்றோருள் பார்ப்பனர் சிலரும் மது மயக்கத்திற்குட்பட்ட நம்மவர் சிலரும் இருந்ததாக உசாவி(விசாரித்து)ப் பார்த்ததில் தெரிய வந்தது. மதுவிற் காட்பட்ட நம்மவர்களைப் பயன்படுத்த முயன்றிருக்கிறனர் போலும்! தம்பி சுடர் வேந்தன் நினைப்பது போல் பார்ப்பனியம் அவ்வளவு வெளிப்படையாக என்றும் வேலை செய்யாது. இரண்டா யிரம் ஆண்டுகளாகக் கல்வி மறுக்கப்பட்டு அறிவடிமைப்பட்டு விட்ட நம் இன மக்களுக்கு மதுவும் உள்ளே போய் விட்டால் சொல் லவா வேண்டும்?

பார்ப்பனியம் ஒழிய வேண்டுமாயின் முதலில் நம்மவர்களுக்கு அறிவுத் தெளிவு ஏற்படுத்தியாக வேண்டும். இது மிகக் கடுமை யான ஆனால் இன்றியமையாப் [illegible]

www.thamizham.net - Free E Book No 7511

என்பது தடியெடுத்துப் போராடுவது என்கின்ற அளவிலான எளிய பணியன்று என்பதை நம் இளைஞர்கள் அறிந்துகொள்ள வேண்டும். எவ்வகையான அறிவுக் கருத்தையும் சிந்திக்கும் ஆற்றலற்றவர்களாகத் தமிழர்கள் இருக்கின்றனர். இந் நிலையில் பெருமை விரும்பிகளையும் மேலாளுமை உணர்ச்சி கொண்டவர்களையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முயல்கின்றனர். அன்று துணைக்கு மதுக் குடியினரும் வாய்த்து விட்டனர்.

இரண்டாயிரமாண்டுகளாக நம் இனத்தைப் பற்றிக்கொண்டு கொத்திக் குதறிக் குலங்குலமாகச் சிதைத்த பார்ப்பனியக் கொள்கைக்குப் படித்தவர்களும் அறிஞர்களுமே ஒடுங்கியும், ஒதுங்கியும் வளைந்தும் போகின்ற பொழுது சிந்திக்கும் ஆற்றலற்ற பொது மக்கள் மீது நாம் வருத்தப்படக் கூடாது. அவர்களுக் குணர்த்தும் பணி கடுமையானது என்பதை மட்டும் உணர்ந்து கொள்ள வேண்டும்; எனினும் இதைச் செய்தாக வேண்டும். நுட்பம் வாய்ந்ததும் கடுமை மிக்கதுமான இவ்வறிவுப் பரப்பற் பணிக்கு இளைஞர்கள் தங்களை அணியப் படுத்திக் கொள்ள வேண்டுகிறேன். இத்தகைய உணர்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளைப் பொறுமை கலந்த நெஞ்சுரத்துடன் எதிர் கொள்ள வேண்டும். — ந. முத்துக்குமரன், பல்லடம்.

0 : 853 : என் நெஞ்சுக்குள் நெருங்கி நினைவில் வதிகின்ற வழிகாட்டித் தமிழ்மரமே! வணக்கம். ஈழத்தில் நம்மினத்தின் எண்ணற்ற வித்துகள், அழியும் செய்தியினை அன்றாடம் பார்க்குங்கால்....

'நெஞ்சாங் குலையை நெருக்கிப் பிழிவது போல்
பஞ்சாகத் தமிழினத்தைப் பாடாய்ப படுத்துவதைக்
கண்டால் மெய்நடுக்கம்; காற்றாக நாம்மாறித்
திண்டாடும் நம்மவரின் தேம்பலுக்கு வழிகாணப்
பறந்து போகோமோ! பாட்டில் அறம் வைத்துச்
சிறந்த தமிழீழம் சிதைக்கும் கயவரெலாம்
இறந்த கதைபாட என் தூவல் திறப்பேனோ
மறந்த வீரத்தின் மணிமுடியை மீட்போமோ
என்று புலம்புமால் என்னெஞ்சு கேளீரோ!

இந்த இழிநிலைகண்டு மனம் கொதிக்காமல் தமிழக முதல்வரும்-தமிழகத் தலைவர்களும் - இந்தியத் தலைமை அமைச்சரும் வாளாவிருக்கின்றனரே! என் செய்வோம் ஐயா! இதற்கோர் அறத் தெய்வம் இனித்தான் பிறந்திடுமோ?

எந்தையை இழந்த போதும்
இத்துயர் அடைய வில்லை!
செந்தமிழ் வித்தெல் லாமே
சிதைவதை - ஈழக் காட்டில்,
சொந்தமே இன்றி அன்றோ
சுருள்வதைப் பொறுக்க லாமோ?
வெந்திடும் நெஞ்சுக் கார்தாம்
விசிறிகொண் டாற்று வாரோ?

— பணிமுத்து 'தமிழ்ச்சுடர்' பழனி

www.thamizham.net - Free E book No. 7511